# வேத பாரதி செய்திகள்


VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

மலர் : 8 இதழ் :7 ஏப்ரல் : 2024 ரூ.20/-

Volume: 8 Issue : 7 April : 2024 Rs.20/-




## SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**83வது பாராயணம் - 08.03.2024 வெள்ளிக்கிழமை**
**மஹா சிவராத்ரி ஸாதராண்ய க்ஷேத்ரம்**
ஆற்காடு, வேலூர் மாவட்டம்.

**84வது பாராயணம் - 15.03.2024 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ திருவுடையம்மன் ஸமதே ஸ்ரீ திருமங்கேஸ்வரர் திருக்கோயில்**
மேலூர், மீஞ்சூர்

**85வது பாராயணம் - 22.03.2024 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் ஸமேத ஸ்ரீ சந்த்ரமௌலீஸ்வரர் திருக்கோயில்**
கதிரவன் காலனி, அண்ணா நகர், சென்னை - 40.

**86வது பாராயணம் - 29.03.2024 வெள்ளிக்கிழமை**
**ஸ்ரீ மல்லிகாஅர்ஜுன ஸ்வாமி, ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்**
ஜுன்னவாடா, நெல்லூர், ஆந்திரா.

**87வது பாராயணம் - 05.04.2024 வெள்ளிக்கிழமை**
**க்ஷேத்ரோபாஸனா கோகுல்தாம்**
மடுவன்கரை, ஸ்ரீபெரும்புதூர் - 602105

---

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி
## செய்திகள்




**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** - மஹாகவி பாரதி

## அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

### வேதமந்திரம் - 56

**அதா[2]தி[4]ப்[1]ரஜம் | மாதா[1] பூ[1]ர்வரூப[1]ம் |**
**பி[1]தோ[1]த்[1]த[1]ரரூப[1]ம் | ப்[1]ரஜா ஸந்தி[4]: |**
**ப்[1]ரஜனனகும்ஸந்தா[4]நம் | இத்யதி[4]ப்[1]ரஜம் |**

**- சீக்ஷாவல்லி, தைத்திரீயோபநிஷத்**

**பொருள் :** *இப்பொழுது ஸந்ததி ஸம்பந்தமான உபாஸனை துவங்குகிறது. தாய் முன் எழுத்து; தந்தை பின் எழுத்து; குழந்தை இடைவெளி; புணர்ச்சி சேர்க்கும் எழுத்து. இவ்விதம் ஸந்ததி ஸம்பந்தமான உபாஸனை முடிகிறது.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

**வேதபாரதி செய்திகள்**
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 8 இதழ்: 7

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 9 |
| சித்திரை மாத விசேஷங்கள் | 12 |
| அட்டைப்பட விளக்கம் | 13 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 16 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 17 |
| தர்மத்தின் குரல் | 18 |
| பூக்களோடு பேசுவோம் | 19 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 24 |
| தருவின் நிழலில் | 35 |
| வீடு பார்க்கும் படலம் | 37 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 40 |
| பத்தின் சிறப்புகள் | 55 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.



**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

**Email:vedabharathichennai@gmail.com**
**Website: www.vedabharathi.org**

*ஸ்ரீ குருப்யோ நம :*

**குரோதி வருஷ புத்தாண்டிற்கு பூஜ்யஸ்ரீ நெரூர் ஸ்ரீவித்யா ஸங்கர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை**

*மனிதர்களாக பிறந்த அனைவருக்கும் அடிக்கடி ஒரு கேள்வி வரும். நாம் ஏன் பிறந்தோம்? நமக்கு என்ன கார்யம்? சில பேருக்கு இந்த கேள்வி வந்து போய்விடும், சிலருக்கு ஆச்சர்யமாக தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். அவ்வாறு இருப்பவர்கள் சிந்தித்து சில கார்யங்கள் செய்வது தான் பின்னாளில் அது சரித்திரமாக வருகிறது. அதை லட்சியம் என்று கூறுகிறோம்.*

*எல்லோருக்கும் ஒவ்வொரு நேரத்தில் ஒவ்வொன்று தோன்றும். எதை லட்சியமாக எடுத்துக் கொள்வது என்று கேட்டால், அங்குதான் பகவான் நமக்கு பெரிய கருணையாக கொடுத்த விஷயம் வேதங்கள். அந்த வேதங்களில் மனிதன் அடைய வேண்டிய விஷயம் புருஷார்த்தம். அதை எப்படி அடைய வேண்டும் என்றமார்க்கம் கிடைக்க வேண்டும். அதைத்தான் தர்மார்த்த காமமோக்ஷம் என்று சொல்லி அதை அடைவதற்கு நாம் என்னென்ன கார்யங்கள் செய்ய வேண்டும், நமக்கு பகவான் இந்த ஜென்மத்தில் கொடுத்த கடமைகள் என்ன? அதை எல்லாம் நினைவுபடுத்தி, அதற்கு நாம் எவ்வாறு முயற்சி செய்ய வேண்டும் என்ற வழிகளை சொல்வதற்காக தான் வேதங்கள் வந்து சேர்ந்தது.*

*வேதங்களில் உள்ள விஷயங்கள் நமக்கு புரியாமல் இருந்த காரணத்தினாலே பகவானே மகரிஷிகளின் மூலம் ஸ்மிருதிகள் என்ற பெயரில் என்னென்ன செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதற்கு பின் புராணங்கள் இருக்கின்றன. இவை எல்லாமே நாம் எதை அடைய வேண்டுமோ அதைப்*

பற்றி முக்யமாக சொல்லப்படுவதாக உள்ளது.

அதன் காரணத்தினாலே ஸ்மிருதிகள் எல்லாவற்றிற்கும் பெரிய நீதியாக இருக்கக்கூடியது ஸ்ரீமத் பகவத்கீதை. பகவானே தன்னுடையதான முகாரவிந்தத்திலிருந்து சொல்லப்பட்டது. அதில் நிறைய விஷயங்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்.

உதாரணமாக அர்ஜுனன் நான் எல்லாவற்றையும் விட்டு விட்டு சந்நியாசி ஆகப் போகிறேன் என்று சொன்ன போது, பகவான் “அர்ஜுனா உனக்கு இந்த ஜென்மத்தில் அந்தக் கடமை கிடையாது” என்று கூறி யுத்தத்தை செய், அதோடு சேர்த்து அதை எல்லாவற்றையும் எனக்கு அர்ப்பணம் செய்” என்று கூறுகிறார்.

இதைப்போலவே நம் எல்லோருக்கும் தோன்றும் இந்த வாழ்க்கையே வேண்டாம். வாழ்க்கையை விட்டுவிடுவோம் என்று தோன்றும், ஆனால் இந்த இடத்தில் தான் பகவான் நமக்கு செய்யும் உபதேசம் என்னவென்றால் கிடையாது, நீ இந்த வாழ்க்கையை அப்படியே நடத்த வேண்டும். இதை எல்லோரும் என்னிடம் அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று அவரே சொல்கிறார்.

அதை எப்படி செய்ய வேண்டும் என்பதை மிக அழகாக சொல்லித் தருகிறார். இவையெல்லாம் தான் தினசரி நாம் அவருடைய ப்ரீத்திக்காக செய்யக் கூடிய அனுஷ்டானங்கள், பாராயணங்கள், ஸ்தோத்திரங்கள் இவையெல்லாம் அவரை திருப்திப்படுத்தி அவருக்காகவே செய்து, நம்ம வாழ்க்கையை அவருடன் கொண்டு சேர்ப்பதாக அமைகிறது.

நெறிமுறையான விஷயங்களும், சரியான ஒழுங்குமுறையும் நமக்கு புராணங்களும், சாஸ்திரங்களும், கீதையும் சொல்லித் தரும்

*காரணத்தினாலே நல்ல விஷயங்களை நாம் முதலில் கேட்க வேண்டும். அதே சமயம் நல்ல விஷயங்களை சொல்லித் தருபவர்கள் அந்த சங்கங்களில் இருக்க வேண்டும்.*

*இப்படியெல்லாம் செய்வதற்கான ஓர் உபாயமாக இருப்பதுதான் மாதாந்திர ஆன்மீக இதழ்கள். இன்றைய காலகட்டத்தில் நேரம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே ஓர் விஷயத்தை சிந்தித்து தெரிந்து கொள்வதற்கு இந்த மாதிரியான புத்தகங்கள் வெளிவருவது மிக முக்கியமாகும்.*

*அந்த காலத்தில் பெரியவர்கள் மாதாந்திர ஆன்மீக இதழ்களில் வெளிவரும் முக்கிய விஷயங்களை அடிக்கோடிட்டு அல்லது தனியாக ஒரு புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. தற்போது அந்த பழக்கம் அருகிவிட்டது.*

*ஆகையால் நாம் நல்ல விஷயங்களை படிக்கும் விஷயத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதை ஞாபகம் வைத்து தான் ஜகத்குரு ஸ்ரீ சச்சிதானந்த சிவாபிநவ நரசிம்ஹபாரதி மஹாஸ்வாமிகள் அம்பாளை ப்ரார்த்தனை செய்யும் போது ஒரு மனிதனுக்கு எது எது மிக அவசியம் வேண்டும் என ஓர் ஸ்லோகத்தில் சொல்கிறார்.*

*கர்மஸ்வாத்மோசிதேஷு*
*ஸ்திரதரதிஷணாம் தேஹதார்ட்யம்*
*ததர்தம் தீர்கம் சாயுர்யஸஸ்ச*
*த்ரிபுவநவிதிதம் பாபமார்காத்விரக்திம்*
*ஸத்ஸங்கம் ஸத்கதாயா:*
*ஸ்ரவணமபி ஸதா தேவி தத்த்வா*
*க்ருபாப்தே வித்யாம் ஸூத்தாம் ச புத்திம்*
*கமலஜதயிதே ஸத்வரம் தேஹி மஹ்யம் ||5||*

*எனும் ஸ்லோகத்தில் சத்சங்கம் சத்கதாயஹா*

ஸ்வரணமயி” என்று சொன்னார். அதனால் சத்சங்கமும், நல்ல விஷயங்களில் ஈடுபாடும் ரொம்ப அவசியமானது. இன்றைய கால கட்டத்தில் மருத்துவர்கள் “உடம்பிற்கு என்னதான் மருந்துகள் எடுத்து கொண்டாலும் மனது சாந்திக்கு பகவானை சார்ந்தும், சத்கார்யங்களில் ஈடுபட்டால்தான் உடம்பும் சௌக்யமாக இருக்கும்” என்று சொல்கிறார்கள். ஆகையால் மனமும், உடலும் சௌக்யமாக இருப்பதற்கு நல்ல விஷயங்களில் நாம் அவசியம் ஈடுபட வேண்டும். அதை எப்போதும் செய்யக்கூடிய ஓர் அமைப்பு தான் நம் “வேதபாரதி”. அந்த வகையில் இந்த மாத மலரானது விசேஷமாக வெளிவர உள்ளது. இதை எல்லோரும் படித்து, உணர்ந்து பகவானுடைய பாதம் பணிந்து, பகவான் நம்மை ரக்ஷிக்க வேண்டும் என் ப்ரார்த்தனை செய்வோம்.

*நாராயண! நாராயண!*

# 8-ம் ஆண்டு

# ஏகதின கோடி காயத்ரீ ஜபம்

**இடம் :**

வள்ளுவர் குருகுலம் உயர்நிலைப் பள்ளி, தாம்பரம்.

**நாள் :** *01.05.2024*, புதன்கிழமை

அந்தணப் பெருமக்கள் திரளாக கலந்து கொண்டு ஜபம் செய்திட அன்புடன் அழைக்கிறோம்.

பதிவு செய்திட கோத்ரம், சூத்ரம், வேதம், தொலைபேசி எண் ஆகியவைகளை பதிவு செய்திட வேண்டுகிறோம்.

மேலும் தொடர்புக்கு :

**73582 10965 / 63823 08117**

**ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத்பாதாள் பஞ்சமி சேவா ட்ரஸ்ட்**

## உங்கள் சிந்தனைக்கு....

## 7. பரோபகாரம்

நம்முடைய இதிகாசங்களிலும், புராணங்களிலும் வரும் கதா பாத்திரங்கள் ஏதோ ஒரு வகையில் நாம் நம்முடைய வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய நன்னெறிகளை போதிக்கின்றன. அவர்கள் வாழ்ந்த வாழ்கையையும், அவர்களுடைய உயர்ந்த சிந்தனைகளையும் நம்முடைய வாழ்க்கைக்கு ஒரு படிப்பினையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

**1. சிபிச்சக்ரவர்த்தி :** "சிபிச்சக்ரவர்த்தி" என்னும் சோழ மன்னன் தன்னிடம், தஞ்சம் அடைந்த புறாவின் உயிரை காப்பதற்காக தன்னுடைய உடலிலிருந்து புறாவின் எடைக்கு சமமாக சதையை எடுத்து புறாவிற்கு அளித்து புறாவைக் காப்பாற்றினார்.

**2. கர்ணன் :** இவன் சிறந்த வீரன் மட்டுமல்லாமல் சிறந்த கொடைவள்ளல். பிறக்கும்போதே கவசமும், குண்டலமும் உடலோடு ஒட்டி பிறந்தான். அவனிடம் நேரடியாக யுத்தம் செய்ய முடியாத பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனின் உதவியுடன் இந்திரனை ஒரு பிராமணன் போல் வேஷம் போடவைத்து அவன் மூலம் கர்ணனிடமிருந்து அவனுடைய கவசத்தையும், குண்டலத்தையும் தானமாக கேட்கும்படி செய்தார்கள். யார் எதைக் கேட்டாலும் உடனே தானமாக கொடுக்கும் குணம் கொண்ட கர்ணன் கவசமும் குண்டலமும் தன் உடலோடு ஒட்டி இருந்ததால் தன் மேல் தோலுடன் உறித்துக் கவசத்தை தானமாகக் கொடுத்தான்.

**3. ஜீமூதவாஹணன் :** இவருடைய தந்தை ஒரு அரசர். அவர் தன் ராஜ்யத்தை தன்னுடைய மகன் ஜீமூதவாஹணனிடம் ஒப்படைத்துவிட்டு தன் மனைவியுடன் காட்டிற்குச் சென்றுவிட்டார். அரசனான "ஜீமூதவாஹணன்" தன் தாய் தந்தையைக்

காப்பாற்ற பெற்றோருடன் காட்டிற்குச் சென்றுவிட்டான். அந்த காட்டில் நிறைய பாம்புகள் இருந்தன. அந்த பாம்புகளை வதம் செய்ய ஓர் கருடன் காட்டிற்கு வந்தது. இதை அறிந்த பாம்புகள் கருடனுடன் ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொண்டன. அதாவது தினமும் ஒரு நாகம் தன் உடலை ஒரு பட்டுத் துணியால் போர்த்திக் கொண்டு படுத்திருக்கும். அப்போது கருடன் வந்து அந்த பாம்பை தனக்கு ஆகாரமாக ஆக்கிக் கொள்ளலாம். இதற்கு கருடனும் சம்மதித்தது. ஒரு நாள் ஒரு பாம்பின் தாயார் ஜீமூதவாஹணனிடம் வந்து தங்களுக்கு நேர்ந்துள்ள ஆபத்தைக் கூறி "இன்றைய தினம் என்னுடைய பிள்ளைதான் அந்த கருடனுக்கு இரையாக வேண்டும். அவன் எனக்கு ஒரே மகன். அவனை தயவு செய்து காப்பாற்றுங்கள்" என்று வேண்டியது. இதைக் கேட்ட அரசன் "கவலைப்படாதீர்கள் இன்று என்னுடைய உடலை அந்த பருந்திற்கு இரையாக கொடுத்து உங்கள் பிள்ளையைக் காப்பாற்றுகிறேன்" என்று வாக்கு கொடுத்துவிட்டு தன்னை அந்த கருடனுக்கு இரையாக்கி அந்த பாம்பைக் காப்பாற்றி அந்த தாய்க்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றினான் என்பது கதை.

**4. "ததீசி" முனிவர் :** இவர் வேதகால மஹரிஷிகளுள் ஒருவர். ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்தபோது விருத்திராசூரனையும் அசுரர்களையும் வதைக்க இந்திரனுக்கு சரியான ஆயுதம் கிடைக்காமல் மூன்று உலகங்களிலும் அலைந்தபோது "ததீசி" என்று ஒரு முனிவர் இருக்கிறார். அவருடைய முதுகெலும்பை எடுத்து வஜ்ராயுதமாக செய்தால் விருத்திராசூரனையும் அசுரர்களையும் ஜெயிக்கலாம் என்றசெய்தி கிடைத்தது. இந்திரனும் தேவர்களும் "ததீசி" முனிவரை அணுகி விவரங்களைக் கூறியபோது ரிஷிகளுக்கெல்லாம் சிறந்தவரான "ததீசி" யாதொரு

தடையும் இன்றி தம்முடைய ஜீவனை தம்முடைய தேகத்திலிருந்து ஒழித்தார். அவருடைய முதுகு எலும்புகளைக் கொண்டு இந்திரன் "வஜ்ராயுதம்" "சக்ரம்" முதலிய ஆயுதங்களைச் செய்து அசுரர்களுடன் போரிட்டு வெற்றி கொண்டான்.

வள்ளுவர் இந்த கதையில் உள்ள நீதியை மறைமுகமாக ஒரு குறளில் சொல்லியுள்ளார்

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு. (குறள் 72)**

"அன்பு இல்லாதவர் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்.

அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வார்" ("என்பு" என்பதற்கு "எலும்பு") என்றும் பொருள் உண்டு.

இந்திய அரசு வழங்கும் உயர் விருதான "பரம் வீர் சக்ரா" வில் முதுகெலும்பின் படமே உள்ளது என்பது சிறப்பான செய்தியாகும்.

மேற்கண்ட நால்வரும் தங்களுடைய உடல் பகுதிகளை கொடையாகக் கொடுத்து உயர்ந்த ஸ்தானத்தை அடைந்தார்கள். மற்றவர்களுக்கு ஓர் ஆபத்து நேர்ந்தால் நம்மிடம் எது இருக்கிறதோ அதை தானமாக (கொடையாக) வழங்கவேண்டும் என்றஎண்ணம் இன்றைய தலைமுறையினருக்கு வரவேண்டும் தானம் கொடுப்பது எல்லாவற்றிலும் உயர்ந்த குணம்.

**அஷ்டாதஷ புராணானாம் ஸாரம் வ்யாஸேன கீர்த்திதம்**
**பரோபகார புண்யாய பாபாய பரபீடனம்.**

**பொருள் :** பதினெட்டுப் புராணங்களிலும் வியாஸர் சொல்லும் சாரம் இதுதான் பரோபகார புண்யாய பாபாய பரபீடனம்.

பிறர்க்கு உதவுவது புண்ணியம். பிறரைத் துன்புறுத்துதல் பாவம்.

தொகுப்பு : **D. சூரியநாராயணன்**

## குரோதி வருஷம் - சித்திரை மாத விசேஷங்கள்
**(ஏப்ரல் 14.04.2024 முதல் மே 13.05.2024 வரை)**

| | | | |
|---|---|---|---|
| 14.04.2024 | சித் 1 | ஞாயிறு | ஷஷ்டி, தமிழ் வருடப் பிறப்பு |
| 17.04.2024 | சித் 4 | புதன் | ஸ்ரீ ராமநவமி |
| 19.04.2024 | சித் 6 | வெள்ளி | ஏகாதசி |
| 21.04.2024 | சித் 8 | ஞாயிறு | ப்ரதோஷம் |
| 23.04.2024 | சித் 10 | செவ்வாய் | பௌர்ணமி |
| 26.04.2024 | சித் 13 | வெள்ளி | அனுஷம் |
| 27.04.2024 | சித் 14 | சனி | சங்கடஹர சதுர்த்தி |
| 29.04.2024 | சித் 16 | திங்கள் | ஷஷ்டி |
| 01.05.2024 | சித் 18 | புதன் | நடராஜர் அபிஷேகம் |
| 04.05.2024 | சித் 21 | சனி | ஏகாதசி |
| 05.05.2024 | சித் 22 | ஞாயிறு | ப்ரதோஷம் |
| 06.05.2024 | சித் 23 | திங்கள் | ஸ்ரீரமண பகவான் 74வது ஆராதனை |
| 08.05.2024 | சித் 25 | புதன் | அமாவாஸை |
| 09.05.2024 | சித் 26 | வியாழன் | கார்த்திகை விரதம் |
| 10.05.2024 | சித் 27 | வெள்ளி | அக்ஷய திருதியை |
| 11.05.2024 | சித் 28 | சனி | சதுர்த்தி |
| 12.05.2024 | சித் 29 | ஞாயிறு | ஸ்ரீ சங்கர ஜயந்தி<br>ஸ்ரீ ராமானுஜர் ஜயந்தி |
| 13.05.2024 | சித் 30 | திங்கள் | ஷஷ்டி |

### 08.05.2024 புதன்கிழமை - அமாவாஸை

குரோதி நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே வஸந்தருது, மேஷ மாஸே, க்ருஷ்ண பக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து இந்து வாஸர யுக்தாயாம் பரணி நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

## அட்டைப்பட விளக்கம்

## உள்ளம் கொள்ளை கொள்ளும் கள்ளழகர் திருவிழா

## (அ)

## மதுரை மக்களின் மகத்தான கள்ளழகர் திருவிழா

**DR. ஷ்யாமாஸ்வாமிநாதன்**



மதுரை மக்களின் உள்ளம் கொள்ளை கொண்ட மகத்தான திருவிழா கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவம். ஆண்டுதோறும் சித்திரை திருவிழாவின் மிக முக்கிய அங்கம். யார் இந்த கள்ளழகர்? அவர் ஏன் ஆண்டுதோறும் வைகை ஆற்றில் இறங்குகிறார் என்பது மிகவும் சுவாரசியமானது. இந்த வைபவத்தில் மதுரை மக்களின் ஈடுபாடு வியக்கத்தக்கது. கள்ளழகர் ஆற்றில் இறங்கும் அழகு கண் கொள்ளாக் காட்சியாகும், அவர் எந்த வர்ண ஆடை உடுத்தி வரப்போகிறார் என்கிறஎதிர்பார்ப்பும் வார்த்தைகளில் வர்ணிக்க இயலாதது. திருப்பதி ப்ரும்மோத்சவம் போல் மதுரையின் ஆண்களும், பெண்களும், சிறுமிகளும் அழகழகான வேடங்கள் தரித்தும், கும்மி, கோலாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம் என்று ஊர்வலம் வந்து இந்த திருவிழாவிற்கு சிறப்பு சேர்க்கின்றனர். நாலாயிர திவ்யப்பிரபந்தத்தில் கள்ளழகர் கோயில் என்று இன்று புகழ்பெற்றுள்ள ஆலயம் திருமாலிருஞ்சோலை என்று குறிக்கப்பட்டுள்ளது. "அழகர்" என்ற விஷ்ணு பகவான், கள்ளர் வேடமிட்டு வந்தபடியால் கள்ளழகர் ஆனார். கள்ளர் இனத்தவர்களுக்கு இவரே தலைவராகவும்



குலதெய்வமாகவும் திகழ்கிறார்.

இவர் ஏன் ஆண்டு தோறும் யாருக்காக வைகை ஆற்றில் இறங்குகிறார்? என்பது சுவாரசியமான விஷயம். தன் சகோதரி மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண வைபவத்தை நேரில் கண்டு ரசித்திட ஆசைகொண்டு, அழகரான விஷ்ணு பகவான், தன் இருப்பிடமான அழகர் மலையிலிருந்து இறங்கி, மதுரைக்கு வரும் வழியில் எல்லாம் தன் பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்துக் கொண்டே இருந்ததில் தாமதமாகி சகோதரியின் திருமணத்தைக் காண முடியாமல் போய் விடுகிறது. சோகமாகவே மதுரையில் எழுந்தருளியுள்ளார் என்று புராணம் கூறுகிறது.


இதற்கிடையே, துர்வாச முனிவர் வருவதை கவனிக்காமல் பகவான் விஷ்ணுவை ஸ்மரித்தபடியே நூபுர கங்கையில் நீராடிக்கொண்டிருந்த சுதபஸ் முனிவர் மீது கோபம் கொண்டு, இனி நீ தவளையாகக்கடவது (மண்டு கோ பவ) என்று சாபமிட்டு விடுகிறார். இதற்கான சாபவிமோசனமாக, “விவேகவதி (வைகை) தீர்த்தக்கரையில், நீ தபஸ் செய்து கொண்டே வந்தால், சித்ரா பௌர்ணமிக்கு மறுநாள் அழகரான விஷ்ணுவே வந்து சாபவிமோசனம் தருவார்’ என்று விட்டு சென்றுவிடுகிறார். சுதபஸ் முனிவரும், மண்டுக மகரிஷி என்று பெயர் பெற்று, மதுரைக்கு வெகு அருகில் தேனூரில் விவேகவதி என்றழைக்கப்படும் வைகை ஆற்றில், தவம் செய்து வருகிறார். மண்டுக

மகரிஷியினை சாபத்திலிருந்து விமோசனமளிக்க எண்ணி, விஷ்ணு பகவான் அழகர் மலையில் உள்ள தனது உறைவிடத்திலிருந்து இறங்கிவந்தார். அது முதல் மலையப்பட்டி, அலங்காநல்லூர் வயலூர் வழியாக கள்ளழகர், தேனூருக்கு வருவதாக நம்பப்படுகிறது. தேனூர் விவேகவதி மண்டபத்தில் இறைவன் எழுந்தருளி மண்டுக மகரிஷிக்கு சாபவிமோசனம் தந்து அவரை மீட்ட பின்னர் தனது இருப்பிடத்திற்குச் திரும்பிச் செல்வதாக புராணக்கதை இன்றும் நம்பப்படுகிறது. இதனையே அழகர் ஆற்றில் இறங்கும் வைபவமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த சாபவிமோசன நிகழ்வின் போது, நாரை பறக்க விடப்படுகிறது. சிலகாலம் சிதிலமடைந்து கிடந்த இந்த தேனூர்மண்டபம், இப்போது சீரமைக்கப்பட்டு மக்கள் வசதியாக சாலையோரம் நின்று பார்க்கும் வண்ணம் உள்ளதாம்.

மதுரை சித்திரைத் திருவிழாவில் எட்டாம் நாள், மீனாக்ஷி அம்மன் பட்டாபிஷேக மேடைக்கு வந்து, மதுரையின் பட்டத்துராணியாக, முடிசூடும் அழகும் பக்தர்களின் மனதைப்பரவசப்படுத்தும் நிகழ்வு. இதற்கெனவே விநாயகர் சன்னதியிலிருந்து “ராயர் கிரீடம்” எனப்படும் வைரக் கிரீடம் எடுத்துவரப்பட்டு அம்மனுக்கு தயாரிக்கப்பட்டு மதுரையின் மகாராணியாக காட்சியளிப்பார். இதுபோன்ற விழாக்களால் தான் இந்த தேசம் பாரதப் புண்ணிய பூமி என்று போற்றப்படுகிறது. கள்ளழகராக வரும் மகா விஷ்ணுவைப் பிரார்த்தனை செய்து பலன் பெறுவோம்.

இந்த வருடம் 23.04.2024 செவ்வாய்கிழமை வைகை ஆற்றில் ஸ்ரீ கள்ளழகர் எழுந்தருளுகிறார்.

முற்றும்



## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## தர்மம் தலைகாக்கும்

ஸ்ரீ ராமனுக்கு வனவாசத்தில் ஏற்பட்ட கஷ்டம், ஆபத்து எல்லாம் பெரியவை. ஊருக்குப் போகும் குழந்தைக்குத் தாயார் கட்டுச்சாதம் கொடுப்பது போல், ராமன் வனவாஸம் செல்லும்போது கௌஸல்யையும் செய்தாள். "பதினான்கு வருஷம் கெடாமலிருக்கும் பக்ஷணம் எது? குழந்தைக்கு எதைத் தரலாம்? என்று நிரம்ப ஆலோசித்தாள் கௌஸல்யை. பிறகு நிரந்தர பக்ஷணமான தர்மத்தைத்தான் கட்டிக் கொடுத்தாள்.

"ராகவா! தைரியத்துடனும் நியமத்துடனும் நீ பாதுகாக்கும் தர்மமே உன்னைப் பாதுகாக்கும்" என்று சொல்லித் தர்மத்தை ராகவனுக்குத் துணை அனுப்பினாள்.

யம் பாலயஸி தர்ம த்வம் த்ருத்யா ச நியமேன ச|
ஸ வை ராகவ சார்தூல தர்மஸ்தவாம் அபிரக்ஷது ||

தர்மமே இறுதியில் ராமனுக்கு ஜயத்தைப் பெற்றுத் தந்தது. தர்ம மார்க்கத்தில் ஒருவன் இருந்தால் பிராணிகள் கூட, அவனை ஆதரிக்கும்; அதர்மத்தில் விழுந்தால் உடன் பிறந்தவனும் எதிரியாகிவிடுவான் என்பதை ராமாயணம் நிரூபிக்கிறது. ஸ்ரீ ராமனை வானரங்களும் ஆதரித்தன. ராவணனையோ சகோதரன் விபீஷணனும் விட்டு விலகினான்.

தர்மமே தலை காக்கும். பத்துத் தலை ராவணன் விழுந்து நாசமாக, ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி விஜயராகவனாகத் தலை நிமிர்ந்து நின்றதற்குக் காரணம் தர்மம் தலைகாத்தது தான். அவரவருக்கும் முன்னோர்களால் அநுஷ்டிக்கப்பட்ட தர்மமே ஒவ்வொரு மதமாயிருக்கிறது. இந்த தர்மத்தை அவரவரும் தைரியமாக - நியாயமாகப் பின்பற்றிச் சாசுவத சௌக்கியத்தைப் பெறுவார்களாக.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## கர்ம யோகம்

சென்றமாத தொடர்ச்சி




செயல்களினால் பந்தப்படாமல் எப்படி செயலாற்றுவது என்பதை பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் நமக்கு மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். ஒருவன் தான் செய்யும் எல்லாச் செயல்களையும் மற்றும் அவற்றின் விளைவுகளையும் இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டு பலன்களில் பற்று வைக்காமல் தன் கடமைகளை ஆற்றிக் கொண்டு வரவேண்டும். இவ்வாறு கர்ம பந்தத்தில் மாட்டிக் கொள்ளாமல் செயலாற்றும் முறைதான் கர்மயோகமாகும். கர்மயோகத்தைச் செய்பவன் மூன்றாவது சகோதரனைப் போன்றவன் ஆவான். இரண்டாவது சகோதரன் சென்ற பாதையிலேயே அவன் சென்றிருந்தாலும், தனக்கு எந்தவித சிறு காயமும் ஏற்படாதவாறு அவன் பார்த்துக் கொண்டான். மிக புத்திசாலியான அவன் எவ்வாறு தன் கால்களைத் துணியால் கட்டிக் கொண்டு தன்னைப் பாதுகாத்துக் கொண்டானோ அவ்வாறு கர்மயோகியானவன். தனது செயல்களையும், அதனால் விளையும் பலன்களையும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் மூலம், தன்னைக் கர்மங்கள் பந்தப்படுத்தாதவாறு பாதுகாத்துக் கொள்கிறான்.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-8 வேதங்களில் விஞ்ஞான உண்மைகள் :*

நுண்மையமான எண்ணங்களும் அதன் பாற்பட்டதே. பொதுவாகச் சொன்னால், இடப்பக்கம் ஸ்தூலக்கிரியைகளுக்கும் வலப்பக்கம் நுண்ணிய செயல்களுக்கும் பொறுப்பேற்பன. (Molecular Neuro Biology of the Mammalian Brain by P.L.Mc. Gear, J.g. eccles, E.G.Mc Gear, (1978) Plenum Press, Page 557) இது மருத்துவர்களால் சோதனை மூலம் காட்டப்பட்டது. ஸ்பெர்ரியின் ஆலோசனையின்படி, மருத்துவர்கள், வலிப்பு நோயாளிகளின் மூளையைச் சரியாக நடுப்பாதியில் அறுத்து, வலிப்பு நோயைத் தீர்த்தார்கள். உடலின் வலப்பாதி இடது மூளைக்கும், இடது பாதி வலது மூளைக்கும் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு மனிதன் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகிறபோது அவனுடைய உடலின் வலப்பகுதி பாதிக்கப்படுகிறது. அப்பொழுது அவன் மூளையின் இடப்பாகம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதே பொருள். இந்நேரங்களில், மூளையின் வலப்பக்கம், கொஞ்சம், கொஞ்சமாக இடப்பக்கத்தின் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்கிறது. ஆனால் வலப்பக்கம் பாதிக்கப்பட்டால், இடப்பக்கம் அதன் பொறுப்பை ஏற்க இயலாது. இது வலது மூளையின் ஈடற்ற தலைமைத் தன்மையைக் காட்டுகிறது.

தொடரும்..

# பூக்களோடு பேசுவாம்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்“

## “மினி கைலாயம்” எனும் நாகலிங்கப் பூ

## பகுதி - 2

நாகலிங்கபூவின் தாவரயியல் விளக்கங்கள், இந்த மலரை நம்மிடமிருந்து சற்று அந்நியப்படுத்துவது போல் இருந்தாலும், சில வியக்கும் அம்சங்களை அதிலிருந்து நாம் பெறமுடிகிறது. வாய்க்குள் நுழையாத தாவரவியல் பெயரை கொண்டிருக்கும். இம்மரம் அகில உலகத்திற்கும் சொந்தமானது என்று சொல்வதிலிருந்தே, அதற்கான சிவத்தன்மை நிரூபிக்கப்படுகிறதல்லவா? வடஅமெரிக்க காடுகளுக்கு சொந்தமான இந்த மரம், இதன் விசேஷமான குணங்களுக்காகவும், காண்பவரைக் கவர்ந்து, மனதை அமைதிப்படுத்தக் கூடிய வடிவத்தினைக் கொண்டிருக்கும் மலர்களுக்காகவும் உலகமெங்கும் வளர்க்கப்படுகிறது.

நாகலிங்கப் பழம் மிகவும் விசேஷம். ஒவ்வொரு பழமும் ஒரு கால்பந்து அளவிற்கு இருக்கிறது. இது பூமியில் பட்டு உடையும் சத்தம் வெடி வெடிப்பதைப் போல இருக்குமாம். ஒவ்வொரு பழத்துக்குள்ளும் 65 முதல் 550 விதைகள் வரை இருக்கும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். ஒரு மரத்தில் ஒரே சமயத்தில் 150 பழங்களுக்கு மேல் இருக்கும். இந்தப் பழங்கள் முதிர்ச்சி அடைவதற்கு குறைந்தபட்சம் 12லிருந்து, அதிகபட்சமாக 18 மாதங்கள் வரை ஆகும். அமேசான் காட்டு பகுதிகளில் இந்த மரம் துர்தேவதைகளிலிருந்து காக்கும் மரமாக நம்பப்படுகிறது. ஆசிய கண்டத்தில் இந்த மரம் செல்வத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. நாகலிங்கமரம், காற்றின் மாசுக்களின்

அளவைக் காட்டும் குறியீட்டுக் கருவியாகவும் கருதப்படுகிறது. காற்றில் அதிகமான இரசாயன மாசு கலந்திருந்தால், அதனை இதன் இலைகள் அதிகமாக உதிர்ந்து வெளிப்படுத்தும்.

சிவாம்சம் பொருந்திய மலர்களைத் தாங்கும் நாகலிங்க மரத்தை உலகமெங்கும் எக்காரணத்திற்காகவும் வெட்டி அப்புறப்படுத்தும் செயல் நிகழ்ந்ததே இல்லை. உதாரணமாக, நாசிக் நகரத்திலுள்ள "Falak campus" எனும் இடத்தில் இருக்கும் மிகப் பழமையான நாகலிங்க மரத்தை சாலை விரிவாக்கத்தின் போதும் பத்திரமாகப் போற்றிப் பாதுகாத்து வருகின்ற விஷயம் மகாராஷ்டிரா மாநிலம் முழுவதும் புகழ்பெற்று விளங்குவதோடு, இந்த மரத்தைப் பார்த்துச் செல்வதற்கென்றே பொது மக்கள் வந்து செல்கிறார்கள் என்கிறது ஒரு மலர் ஆய்வுக் கட்டுரை. இந்த மரத்தின் ஸ்தலமர மகிமை மிக விசேஷம். தேவதானம்பட்டி எனம் சிற்றூர் விருதுநகர் மாவட்டம், ராஜபாளயத்திலிருந்து 12 கி.மீ. தூரத்தில் தென்காசி செல்லும் சாலையில் உள்ளது. ஊரிலிருந்து 3 கி.மீ. தொலைவில் வயல் வெளியில், ஆலயம் அமைந்துள்ளது. வீரபாகுபாண்டியனால் கட்டப்பட்டது. “நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி” எனப்படுகிறார் மூலவர். இங்கே ஸ்தலமரம் நாகலிங்க மரம். மூலவர் மகப்பேறு அளிக்கும் சிவனாகக் காட்சியளிக்கிறார். பிள்ளைவரம் வேண்டிப் பெண்கள், மாதக்குளியல் குளித்த ஐந்தாம் நாள், இவ்வாலயத்திற்கு வந்து வணங்கி தங்கள் விருப்பத்தைச் அர்ச்சகரிடம் சொன்னால், சன்னதியிலிருந்து மூன்று நாகலிங்கப்பூவை எடுத்துத்தருவார். ஒன்றை வில்வத்துடன் அந்த ஆலயத்திலுள்ள அம்மியிலேயே,

வீட்டிலிருந்து கொண்டு வந்த பாலுடன் சேர்த்து அரைத்து, சிவசன்னதியில் அருந்த வேண்டும். 2வது, 3வது பூக்களை வீட்டிலேயே சிவனை பூஜித்து, அரைத்து உட்கொள்ள வேண்டும். மகப்பேறு பாக்கியம் உறுதி என்று நம்பிக்கை.

திருக்கரம்பனூர், இப்போது உத்தமர் கோயில் என்றழைக்கப்படுகிறது. சிவா-விஷ்ணு கோயில், பிரும்மாவும் இணைந்து காணப்படும் கதம்பக்ஷேத்ரம். கதம்ப முனிக்கு மஹாவிஷ்ணு தரிசனம் கொடுத்ததால்தான் கதம்ப க்ஷேத்ரம் எனப்படுகிறது. மஹா விஷ்ணு 'உத்தமர்' என்றும், சிவன், 'பிக்ஷாண்டர்' என்றும் பெயர் பெற்றிருக்கிறார்கள். சிவனை விட, தான் உசத்தி என்கிற எண்ணம் ஒரு சமயம் பிரும்மாவிற்கு ஏற்பட்டது. அந்த எண்ணத்துடனேயே கைலாசத்தில் சிவபெருமானை தரிசிக்கச் சென்றார். ஐந்துதலை கொண்டிருந்த பிரும்மாவை அவரது முகத்தைப் பார்க்காமலே சிவன் என்று நினைத்து, பார்வதிதேவி அவருக்கு பாத பூஜை செய்து விடுகிறாள். இதனைக் கண்ணுற்ற சிவன், பிரும்மாவின் ஒரு (நடு) தலையைத் தனது கைகளால் கொய்து விடுகிறார்.

சதுர்முகன் ஆகிறார் பிரும்மா, சிவபெருமானுக்கு ப்ரும்மஹத்தி தோஷம் வந்துவிடுகிறது. பிரும்மாவின் மண்டை ஓட்டையே பிக்ஷைப் பாத்திரமாகக் கொண்டு, உலகம் முழுவதும் கால்நடையாகச் சென்று பிக்ஷை எடுக்கிறார் சிவபெருமான். ஒவ்வொரு முறை அந்தப் பாத்திரம் உணவால் நிரப்பப்படும் போதும், அது அந்த நொடியிலேயே மறைந்து விடுகிறது. கடைசியாக பிட்ஷாண்டார் ஆலயத்தில், பூர்ணவல்லித்தாயார், சிவ பெருமானின் பசியைப் போக்குகிறார். எனவேதான் இவ்வாலயத்தில், பிரம்மா,

விஷ்ணு, சிவன் ஆகியோரோடு பூர்ணவல்லி, பூர்வாதேவித் தாயார்களையும் ஒருங்கே தரிசிக்க முடிகிறது. இந்த ஆலயத்தில் கதம்ப மரம் தான் ஸ்தல மரம் என்றாலும், இங்குள்ள நாகலிங்க மரம் விசேஷ கவனம் பெற்று விளங்குகிறது. நாகலிங்கப் பூவால் வழிபடுவதே இவ்வாலயத்தின் சிறப்பு வழிபாடாகவும் கருதப்படுகிறது. இந்த க்ஷேத்திரம் திருச்சியிலிருந்து மணச்சநல்லூர் வழி சேலம் சாலையில் 5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது.

நாகலிங்க மரம் ஸ்தல வ்ருட்சமாக விளங்கும் மற்றுமொரு ஸ்தலம். ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரர் ஆலயம். அகஸ்திய க்ஷேத்ரம். 500 - 600 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. கொல்லுமாங்குடி அருகே பாவட்டக்குடி எனும் ஊரில் இந்த ஆலயம் உள்ளது. (நன்னிலம் தாலுகா, திருவாரூர் மாவட்டம்) காஷ்யப மகரிஷி வழிபட்டதால் 'தியாக வினோத நல்லூர்' என்ற பெயரும் உண்டாம். நாகதோஷத்திற்கான சிறப்பு ஸ்தலம் மூலவரின் ஆவுடை தாமரை மலர் மீது இருப்பது விசேஷம். அகஸ்தியரும் லோபமுத்ரையும் தம்பதி சமேதராக இங்கே எழுந்தருளி இருப்பதையும் இங்கே தரிசிக்கலாம்.

நாகர்கோயிலில் நாகம்பாள் உடனுறை நாகராஜர் ஆலயத்தில் நாகலிங்கமரம் ஸ்தலமரம். தை மாதத்தில் நடைபெறும் பிரும்மோத்சவம் மிக விசேஷம்.

தன்னலமற்ற வளமைதரும் நாகலிங்கப்பூவை நமக்கு அள்ளித்தரும் நாகலிங்கமரத்தை, செவ்வாய் தோஷம் உடையவர்களும், செவ்வாய் சாதகமற்ற நிலையில் உள்ளபோதும், நடச்சொல்கிறது வ்ருட்ஷ

சாஸ்திரம். ஒரு செவ்வாய் அன்று காலையில் செவ்வாய் கிருஹத்திற்கான தானியத்தை ஊறவைத்து, அதன் நீரை செடிக்கு ஊற்றிவிட்டு, தானியத்தை ஆட்டிற்கு கொடுப்பது நன்மை பயக்கும். கடன் நீங்கி வல்லமை தரும், இந்த மரத்தின் இலைகளை அரைத்து தோல் நோய்களுக்கு மருந்தாகவும், இலைகளை மென்றுதின்பதால் பல் வலிக்கு மருந்தாகவும், பட்டைகளையும், காய்களையும் பக்குவப்படுத்தி, விஷ காய்ச்சலுக்கு மருந்தாகவும் பயன்படுத்தலாம் என்கிறது சித்தமருத்துவம். இந்த பூவிற்கு 21 மகரிஷிகள் தங்கள் தவ ஆற்றலைக் கொடுத்துள்ளதாக புராணங்கள் கூறுகிறது என்று படித்தேன். இதன் மகிமையை இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். ‘‘வானத்தின் மீது பூமி எழுதும் கவிதைகள்தான் மரங்கள்’’ என்ற கலீல் கிப்ரானின் வரிகளையும், “பூவாகி, பூவுக்கோர் நாற்றமாகிப் புக்குளால் வாசமாய் நின்றானாகி’’ என்கிற நின்ற திருத்தாண்டகத்தின் வரிகளையும் நம் மனதில் ரசித்தபடியே, விஷ்ணுவுக்குரிய ‘கிருஷ்ண கமலப்’ பூவோடு பேசுவோம்.

தொடரும்...

## அறிவிப்பு

**வேதபாரதி செய்திகள் புத்தக பொறுப்பாசிரியர் ஸ்ரீ D.சூர்யநாராயண மாமா வழங்கும் மாதாந்திர கட்டுரைகள் அனைத்தும் அடுத்த மாதம் வெளியாகும்.**

- வேதபாரதி

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 40

மேற்படிப்பு முடித்தவுடன் வேலை. பெண் குழந்தைகளாக இருந்தால் ஒரு வருடம் கழித்து திருமணம் பையனாக இருந்தால் முதலில் ஒரு கார், பிறகு ஒரு ஃபிளாட், அதற்கு பிறகு திருமணம் இதுதான் பொதுவாக ஒரு குடும்பத்தின் "பிளான்".

வேலை தேடும் முன்னர் 'COSI' என்று சிறிது யோசியுங்கள். அது என்ன "கோசி"?

C – Capacity *(அ)* Capability

O – Opportunity *(அ)* Organizing Ability

S – Situation *(அ)* Systematic Approach

I – Interest *(அ)* Passion

**"ஒருமைக்கண் தான்கற்றகல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து"**

*(அதிகாரம் – 40, குறள் – 398)*

"ஒருவன் இப்பிறவியில் கற்றகல்வியறிவு வரும் பல பிறப்புகளிலும் சென்று பாதுகாக்கும் தன்மையுடையதாகும்" என்கிறார் வள்ளுவர் பெருமான்.

அத்தகைய கல்வியறிவு பெற்றவன் தன்னுடைய திறன் மற்றும் ஆற்றல் எதிலுள்ளது என்று முதலில் அறிய வேண்டும். (CAPACITY)

தன்னால் எதைச் செய்ய இயலும், இத்திறனை மேலும் வளர்த்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும் (CAPABILITY) என்று யோசிக்க வேண்டும்.

தான் முன்னேற வெற்றி வாய்ப்புகள் உள்ளன.

பிடிக்காத தெரியாதவற்றில் தன்னை நிலைநாட்டிக் கொள்வது (OPPORTUNITY) அல்ல என்று புரிந்து கொள்ள வேண்டும்.

தன் குடும்ப படிப்பறிவு, பொருளாதார நிலை, தன்னைச் சுற்றியுள்ள சமூகப்பார்வை என்று பல்வேறு விஷயங்களை (SITUATION) கவனித்து மனதில் பதித்து கொள்ள வேண்டும்.

மேற்கூறிய நான்கையும் யோசித்து, இப்பணி உயர்ந்தது, அப்பணி தாழ்ந்தது என்று தயவு செய்து பெற்றோர்கள் எண்ணாமல், மேற்கூறிய நான்கு விஷயங்களை மனதில் கொண்டு உங்கள் மகன் (அ) மகளை வழிநடத்துங்கள்.

உனக்கு பொருத்தமானது எது, பொருத்தமற்றது எது என்று கண்டுபிடிக்க உங்கள் மகன் (அ) மகளை பயிற்சி செய்துக் கொள்ளச் சொல்லுங்கள். “கும்கி” யானையாக மாறாதீர்கள்.

அவர்கள் ஒரு பணியை ஏற்றுக் கொண்ட பின், விவரங்களைக் கேட்டறிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு சந்தேகங்கள் இருந்தால் ஒரு மாதம் சென்றபிறகு கேளுங்கள்.

'DON'T PUSH, BE IN TUNE WITH THEM' என்று ஆங்கிலத்தில் சுலபமாகக் கூறுவார்கள். இது பணியை (JOB) துவங்கும் தான் பெற்றகுழந்தைகளிடம் பெற்றோர்கள் கட்டாயமாக பின்பற்றவேண்டும்.

“இதெல்லாம் ஒரு வேலையா? கவர்மெண்ட் வேலையானா காலையில் போனோமா, 5 மணிக்கு வீட்டுக்கு வந்தோமான்னு இருக்கலாம்” என்று மகன் (அ) மகளுக்கு அத்தகைய எண்ணமே இல்லாத பொழுது, உங்கள் அனுபவத்தை திணிக்காதீர்கள்.

“இதென்னடா கம்பெனி, பெயரைக் கேள்விப்பட்டதேயில்லை” என்று மட்டம்

தட்டாதீர்கள். உங்கள் காலம் வேறு, இன்று "ஸ்டார்ட்-அப்ஸ்" (START-UPS) பெரிதாக ஓடும் காலம் வேறு.

"ஒரு ஸ்டார்ட்-அப்" (START-UP) நிறுவனத்தில் பணியை ஆரம்பித்து, கற்றுக் கொண்டு பிறகு பத்தாயிரம் பேர் உள்ள நிறுவனத்தில் என்னை உயர்த்திக் கொள்கிறேன்" என்பவர்கள் உண்டு.

"பத்தோடு பதினொன்றாக இருக்க விரும்பவில்லை. "ஸ்டார்ட் – அப்" (START-UP) இல் இணைந்து நாளை வாய்ப்பு கிடைத்தால் "பார்ட்னர்" ஆகும் எண்ணமுள்ளது" என்பார்கள்.

"நான் படித்தது போதாதுப்பா, 2 வருஷம் வேலை செய்துவிட்டு, மேலும் படித்து அடுத்த வேலை தேடணும்" என்று கூறினால், அப்பொழுது குடும்ப பண நிலைமை, பெண்ணுக்கு கல்யாணம் போன்றபொறுப்புகளை பற்றி கூற, மகன் (அ) மகள் எப்படி உதவ வேண்டும், குடும்பத்தின் தேவையென்ன என்று கட்டாயம் கூறவேண்டும்.

"இந்த காரணங்களினால் உன்னை தடுக்கும் நிலையிலிருக்கிறேன்" என்று தெளிவுபடுத்தி, அவர்களை குடும்பத்திற்கு தேவையான முடிவிற்கு கொண்டுவர, உரிய மரியாதையை பேச்சில் அமைத்து அமைதியாகக் கையாளுங்கள்.

தொடரும்...

## வாழ்த்துக்கள்

வேதபாரதியின் வாசகர்கள், விளம்பரதாரர்கள், புத்தககுழுவினர்கள், கட்டுரையாளர்கள் அனைவருக்கும் **14.04.2024 குரோதி வருஷ தமிழ்புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

- வேதபாரதி

# ஔவையார்
# "மூதுரை"

*"**மூதுரை**" = முதுமை + உரை = மூதுரை பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டிருப்பதால் "**மூதுரை**" என அழைக்கப்படுகிறது. இந்நூலில் மொத்தம் 30 வெண்பா பாடல்கள் அமைந்துள்ளன.*

## வெண்பா 19

**ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்**
**நாழி முகவாது நானாழி – தோழி**
**நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்**
**விதியின் பயனே பயன்.**

**பொருள் :** *தோழி! எவ்வளவு தான் அமுக்கி, பெரும் கடலிலே முகந்தாலும், ஒரு நாழி (படி) அளவுள்ள பாத்ரம் நான்கு படி நீரை முகவாது. நல்ல கணவனும், செல்வமும் நிறைந்திருந்தும் நமக்குக் கிடைக்கும் சுகத்தின் அளவும் அதைப் போன்றதே. அது நம் முன் ஜன்ம நல் வினைகளின் அளவைப் பொறுத்தது.*

**விளக்கம் :** *இந்த பாடல் கருத்து ஆழம்மிக்க பாடல். இப்பாடலில் ஔவையார் 'தோழி' என்று அழைத்து பெண்களுக்கு அறிவுரை கூறுகிறார். தானியங்களை ஒரு படியில் கூட்டியோ குறைத்தோ அளந்துவிடலாம். ஆனால் சமுத்திரத்தில் ஒரு நாழியை (படியை) எவ்வளவுதான் அமுக்கி அமுக்கி அளந்தாலும் ஒரு படி தண்ணீர்தான் இருக்கும். அதுபோல ஏராளமான செல்வமும், பண்பும் உடைய கணவன் ஒரு பெண்ணிற்கு கிடைத்தாலும் அந்த பெண்ணின் ஊழ்வினையைப் பொறுத்தே பயனை அடைய முடியும். கணவனும் மனைவியும் கருத்து வேறுபாடு இல்லாமல், ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் அவர்களுக்குள் எழும் பிரச்சனைகளில் அடுத்தவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது அப்படி வாழ்ந்தால் வாழ்க்கையில் ஒரு குறையும் நேராது என்று தான் இப்பாடலின் கருத்து கூறுகிறது.*

*தொகுப்பு :* **பரிதி**

*இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்*
**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**
*வேளச்சேரி*

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.




- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிரூட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**

# ஸ்ரீமான் இராமகிருஷ்ணன்

*அறங்காவலர்*
*ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்*
*ஸ்ரீ சங்கரா எஜுகேஷனல் ட்ரஸ்ட்*

*03.03.2024 ஞாயிறு காலை பெரியவாள் பாதம் சென்றடைந்தார்கள்.*

*2013-ம் ஆண்டு முதல் வேதபாரதி அமைப்பிற்கு பேருதவி செய்த பெரும் புண்ணியவான். ஆத்திசூடி கொன்றைவேந்தன், திருப்பாவை, திருவெம்பாவை புத்தகங்கள் வழங்குவதில் ஆரம்பித்து போட்டிகள் நடத்திடவும் பரிசளிப்பு வழங்கி வழி நடத்தியவர். பண்பாளர் என்ற சொல்லுக்கு இலக்கணம் நம் சார்தான். சிறந்த எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர். சங்கரா எஜுகேஷனல் ட்ரஸ்ட்டில் உள்ள பள்ளிகளுக்கு மிகச்சிறந்த நிர்வாகி. நன்கொடையாளர்களின் நன்மதிப்பை பெறுவது ஏனெனில் நிதியை சரியாக பராமரிப்பு, பயனாளிக்கு வழங்குவதிலும் நற்செயல்கள் செய்வதிலும் தனி முத்திரை பதித்தவர்.*

*பொதுவாழ்க்கை என்பதை தவமாக செய்து எந்த இடத்திலும் தான் செய்ததாக பறைசாற்றவிரும்பாத ஞானி.*

*இறைவன் கொடுத்த பெரும் பாக்யம் வேதபாரதிக்கு சார் அறிமுகம் ஆகி 10 ஆண்டுகளுக்கும் மேலாக தனது செயல்கள் மூலம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பொதுவாழ்க்கை நியமங்களை கற்றுக்கொடுத்தவர்.*

*சாருடைய இழப்பு நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் அவர் நினைவைப் போற்றி அவர் போலவே சீரிய முறையில் பொது தொண்டு செய்வது தான் சாருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்.*

**வெங்கட்ராமன், வேதபாரதி**


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# வேதஸ்ரேணி

## Mini Function Hall (A/C)

*Traditional Ambience with Modern Amenities*



Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement | Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham | Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events

Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking | CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2

Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42

95002 67471 | 98414 46897 VEG FOOD ONLY



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின்
துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)



V Krishnamoorthy
Managing Trustee

பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

- ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!



அடையாறு கேன்சர் மருத்துவமனைக்கு வரும் வெளியூர் ஏழை புற்றுநோயாளிகள் பணம் செலவழித்து தங்கவும் சாப்பிடவும் இயலாத நிலையில் அவர்களை இருகரம் நீட்டி அரவணைத்துக் கொள்கிறது நமது **நம்ம தர்மசாலா.** இங்கு தஞ்சமடையும் ஏழை புற்றுநோயாளிகள் நிம்மதியாகவும், பாதுகாப்பாகவும், இந்நோயிலிருந்து விடுபட்டு தங்கள் குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்போம் என்கிற தன்னம்பிக்கையுடனும் இருக்கிறார்கள். ஏழை புற்றுநோயாளிகளுக்கு நம்ம தர்மசாலாவில் மூன்று வேளை உணவு பாதுகாப்பான தங்குமிடம் ஆகியவை ஏழை புற்று நோயாளிகளின் சிகிச்சை காலம் முழுவதும் **முற்றிலும் இலவசமாக** வழங்கப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் முறை யான சிகிச்சையை, தடையின்றி பெற்று விரைவில் இக்கொடிய நோயிலிருந்து விடுபடுகிறார்கள். **ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு வழங்க உதவி செய்திடுங்கள். உண்மையான இன்பம் இதுவே என்று உணர்ந்திடுங்கள்...**



முதுமை – வறுமை – தனிமை இவற்றுடன் போராடும் ஆதரவற்ற ஏழை முதியவர் களுக்காக செங்கல்பட்டு, மாமண்டூர் கிராமத்தில் நாம் நிர்மாணித்து வரும் இலவச மாற்று இல்லத்தின் கட்டிட நிதிக்கு **G.R.T.Jewellers** நிறுவனம் தனது CSR நிதியிலிருந்து ரூ.5,00,000/- நன்கொடை வழங்கியது. அதற்கான காசோலையை அந்நிறுவனத்தின் "CSR Incharge" திரு **ஜனார்த்தனன்** அவர்கள், ஸ்ரீ மாதா டிரஸ்டைச் சேர்ந்த திரு. சீனிவாசன் மற்றும் திருமதி தீபா இராமகிருஷ்ணன் ஆகியோரிடம் வழங்கி மகிழ்ந்தார். எளிய மக்களின் நலன் காக்கும் வகையில் பல்வேறு தர்ம காரியங்கள் செய்து வரும் **"மனிதநேய ஸ்தாபனம்"** **G.R.T.Jewellers** இன்னும் பல உயரங்களை அடையவும், அந்நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் நூறாண்டுகள் நலமுடன் வாழவும் இறைவனை ப்ரார்த்திக்கிறோம்.



## ஸ்ரீ ஜயேந்த்ர பெரியவா நினைவு
## ஆதரவற்ற - ஏழை பிராமணர்களுக்கான இலவச முதியோர் இல்லம்

செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூர் (சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில்) சுமார் 30,000 Sft. பரப்பளவில் வயது முதிர்ந்த – ஆதரவற்ற பிராமணர்கள் பல்வேறு குடும்பச் சூழ்நிலை காரணமாக தேவையிருப்பின் தங்குவதற்கு, 64 படுக்கைகளுடன் முதியோர்களுக்கு ஏற்ற வகையில் பல்வேறு சௌகர்யங்களுடன் கூடிய ஒரு "**முதியோர் இல்லம்**" நிர்மாணித்து வருகிறோம். புற்றுநோயிலிருந்து மீண்டு, தற்போது எவ்வித



ஆதரவும் இன்றி தவிக்கும் பிராமணர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இந்த இல்லத்தின் கட்டுமானப் பணி மற்றும் அதன் அத்தியாவசிய தேவைகளுக்கு சுமார் ரூ.**13 கோடி** தேவை என்கிற நிலையில், நல்ல மனிதர்களின் தாராள நிதியுதவி மற்றும் நல்லாசி களை மனதார வேண்டுகிறோம். **இந்த இல்லத்தின் கட்டிட பணிக்கு ரூ.5,00,000/- வழங்குவோர் விரும்பும் பெயரில் இவ்வில்லத்தில் தங்கும் அறை ஒன்று அமைக்கப்படும். தாங்கள் விரும்பிய நன்கொடை வழங்குவோர் பெயர்களும் தகுந்த முறையில் பதிவு செய்யப்படும்.** காலத்தால் அழியாத தர்ம ஆலயமாக தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய இந்த ஒப்பற்ற தர்ம கார்யத்திற்கு வழங்கப்படும் நன்கொடை உங்களுக்கும் உங்களது சந்ததி யினருக்கும் மாபெரும் புண்ணியத்தை சேர்க்கும் என்பது எங்களது திடமான நம்பிக்கை...

**சிந்தியுங்கள்...**

**செயல்படுங்கள்...**



## தங்களது நன்கொடையை இவ்வாறு வழங்கலாம்

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635

வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

| | | |
|---|---|---|
| Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act. | Sri Matha Trust PAN No. **AACTS9747G** | நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும். |

Admin Office: 95/42, Flat No.3, Ground Floor, Rams Apartment, 2nd Main Road, Gandhi Nagar, Adyar, [next to Harini Skin & Laser Clinic] Chennai-20. Tel: 044 - 24420727, 42661687
Namma Dharmasala: 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044 - 4509 8647
9500001065 / 9003247857 vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org

# தருவின் நிழலில்

## மூங்கில் (BAMBOO - Bambuscideae)

*மனித வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கும் மூங்கில் ஒரு புல் வகை தாவரம். 1500 க்கும் மேற்பட்ட மூங்கில் வகைகள் உண்டு. சுமார் 40 மீட்டர் வரை வளரும் மூங்கில், தாவரங்களிலேயே மிக வேகமாக வளரக்கூடியது. ஒரு நாளில் 1 லிருந்து 2.5 மீட்டர் வரை வளரக்கூடியது. இவற்றின் வயது அறுபது ஆண்டுகள்.*

*இந்தியாவின் மேற்கு வங்கம், ஒரிசா, ஆந்திரா, மஹாராஷ்ட்ரா, வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் சீனா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, நேபாளம் போன்ற நாடுகளில் அதிக அளவில் விளைகிறது. இப்பகுதிகளில் வாழும் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் மூங்கில் "பச்சைத் தங்கம்" என்றழைக்கப்படுகிறது.*

*மூங்கில் மண் அரிப்பை தடுத்து மண்வளத்தைக் காக்கும் சுற்றுச் சூழலின் நண்பன் ஆகும். அம்மரம் பூப்பதும், காய்ப்பதும் அரிதானதாகும். எப்போதாவது பூக்கும் இம்மரம் காய்த்துவிட்டு தனது ஆயுளை முடித்துக் கொள்ளும். இவை பூக்கும் காலங்களில் "கொறி விலங்குகளில்" எலிகளுக்கு நல்ல உணவாக இருப்பதனால், இக்காலங்களில் இவற்றின் எண்ணிக்கை அதிகமாகிறது. இதன் காரணமாக "மிசோராம்" போன்றமாநிலங்களில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் மூங்கில் பூக்கும் காலங்களில் கடும் பஞ்சம் ஏற்படுகிறது.*

*மூங்கில் குருத்துக்களை பொரியல், ஊறுகாய் போன்றஉணவுப் பொருட்களாகவும் சமைத்து சாப்பிடுகின்றனர். மூங்கில் கணுக்களில் "டபாசீர்" அல்லது "பேன்ஸ் லோசன்" எனும் மணற்சத்து நிறைந்த நுண்ணிய சிலிக்கா சாறு கிடைக்கிறது. இது ஆஸ்துமா,*

இருமல் போன்றவற்றிற்கு சிறந்த மருந்தாக பயன்படுகிறது. “மூங்கிலரிசி” எனப்படும் இதன் காய்கள் மூலம் கிடைக்கும் அரிசியானது, மருத்துவ குணங்கள் அதிகம் நிறைந்த சிறுதானிய உணவாகும்.

லட்சக்கணக்கானோரின் வாழ்வாதாரமான குடிசைத் தொழில் கைவினைப் பொருட்கள் செய்வதற்கான அடிப்படை மூலப்பொருளாக மூங்கில் பயன்படுகிறது. கட்டடங்கள் கட்டுவதற்கான சாரம் அமைக்கவும், காகிதம் தயாரிப்பிற்கான மரக்கூழ் செய்யவும், தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கும் பயன்படும் மூங்கில் மர இலைகள் “பாண்டா”, “மூங்கில் லெமூர்”, எலி போன்றவைகளுக்கு உணவாக பயன்படுகிறது. **- ஆதிரையன்.**


**வேதபாரதி**
**வங்கி கணக்கு எண்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| Account No (CA) | : | 510909010005286 |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank, Velachery |

**வாழ்த்துகிறோம்**

வேதபாரதி அனைத்து ஊர்களிலும் குழந்தைகளுக்கு பதிகங்கள் சொல்லிக்கொடுத்து இறைவன் சன்னிதியில் பதிகங்களை பாடவைத்தல் மிக முக்கியமான பணி. இதை தொடர்ந்து செய்யும் வேதபாரதிக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்

**உரிமையாளர் : S. திருஞானசம்பந்தம்,**
**S.L.T. Hardwares,** 22, 2nd Street, Sarathy Nagar,
Velachery, Chennai - 42.

## வீடு பார்க்கும் படலம்

*வீடு பார்க்கும் படலம் இனிதே பன்னிரண்டாவது முறையாக தொடங்கிற்று. இந்த முறைஎப்பொழுதும் போல இல்லாமல் சற்று யோசித்து, எல்லாம் சரியாக கூடி வந்தால் வீடு வாங்கி விடுவதென்ற முடிவெடுத்தனர் அருணும், நீலாவும், எல்லா வாரக்கடைசி நாட்களிலும் குறைந்தபட்சம் ஏழு எட்டு வீடுகளை பார்த்துவிடுவர்.*

*அருணுக்கு பிடித்தால், நீலாவிற்கு பிடிக்காது, நீலாவிற்கு பிடித்தால் அருணுக்கு பிடிக்காது. இருவருக்கும் பிடித்தால் கண்டிப்பாக வேறு ஏதாவது வில்லங்கம் இருக்கும். இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது, இன்னும் ஆரம்பித்த இடத்திலேயே தான் நின்று கொண்டிருந்தனர்.*

*ஊரில் உள்ள அனைத்து* App *லேயும் தேடி பிடித்து, ஒரு நீள பட்டியலை தயார் செய்து கொண்டு கண்டிப்பாக ஒன்றைமுடிவு செய்ய வேண்டும் என உறுதியோடு இருந்தனர்.*

*ஒரு சனிக்கிழமை காலை பத்து மணியளவில் ஒரு குடியிருப்பு பகுதிக்கு வந்தடைந்தனர். வெளியே சுற்றியுள்ள பூங்காவையும், நடைபாதையும், அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கும் குழந்தைகளை பார்க்க மனதிற்கு பிடித்திருந்தது.* C24 *மூன்றாவது மாடி என செக்யூரிட்டி கூற, இருவரும் லிப்ட்டில் ஏறி அந்த வீட்டை வந்தடைந்தனர். காலிங் பெல்லின் ஓசை கேட்டு ஓர் இளைஞர் கதவைத் திறந்தார்.*

*"சார்,* Mr. *மணி"*

*"ஆமா, ஆமா நான் தான் நேத்து போன்ல பேசினீங்களே, இன்னைக்கு கௌம்பரத்துக்கு முன்னாடி கால் பண்ணுவீங்கன்னு பார்த்தேன், உள்ள வாங்க"*

*"இந்த வீட்டைத் தான் கொடுத்திடலாம் னு பிளான் பண்ணிருந்தோம், பட் ஸாரி இன்னைக்கு காலை தான் தெரிஞ்சுது, எங்க சொந்தக்காரர் ஒருத்தரே முடிவு பண்ணிட்டார்".*

*ஆரம்பிக்கும் முன்னரே சில விஷயங்கள் முடிந்துவிடும்.*

*"ஓ, சரி, தேங்க்ஸ் சார் நாங்க கௌம்பறோம்"*

*"சாரி,* B15 *இருக்கு னு கேள்விபட்டேன், சார். நீங்க அது ட்ரை பண்றீங்களா"*

*"ஓகே சார், போன் நம்பர் இருக்கா?"*

*"நான் இன்பார்ம் பண்றேன், நீங்க பாருங்க, அடுத்த* building *ரெண்டாவது மாடி"*

*"ஓகே சார்"*

*இந்த வீடே அம்சமாக இருந்தது, போட்டோவில் பார்த்ததை விட நல்ல வெளிச்சம் காற்று, சரி பார்க்கலாம் என்று அடுத்த வீட்டிற்கு கிளம்பினர்.*

*வீட்டு வாசலில் அழகான இரண்டு டெரகோட்டா யானைகள், சரியாக பராமரிக்கப்பட்ட பூச்செடிகள், காலிங்பெல் ஓசை கூட சற்று* வித்தியாசமாக இருந்தது. உள்ளே இருந்து எழுபது வயதுத்தக்க ஒரு மனிதர் கதவைத் திறந்தார். எங்களை *அவர் எதிர்பார்க்கவில்லை.*

*"சார், மணி உங்கள் வீடு விலைக்கு இருக்கு னு சொன்னார், கால் பண்ணினாரா"*

"I think I just missed a call, *ப்ளீஸ் உள்ள வாங்க, "என்னோட பேர் கிருஷ்ணன் நாயர், சரி நான் சரியா டிரஸ் பண்ணிக்கலை,* You should excuse me"

*வாட்டசாட்டமான உடல், உயரத்திற்கேற்ற பருமன், வெள்ளை நிறத்தில் டீ ஷர்ட்டும் சந்தன நிறஅரைக்கால் சட்டையும் அணிந்திருந்தார், மிகத்*

திருத்தமான உடல்மொழியைக் காண முடிந்தது. அவர் சிரிப்பிலும் வெகு நாள் பழகியவர் போல ஒரு வாஞ்சை தெரிந்தது. வீட்டிற்குள் சென்றோம். ஒரு பிளாட்டை போல அல்லாமல், அடுக்கு மாடி குடியிருப்பிலேயே விஸ்தாரமாக வீட்டிற்குள்ளே படி வைத்து கீழே இரண்டு அறைகள், மேலே இரண்டு அறைகள் என இருந்தது. வாழ்க்கையை ரசித்து வாழ்பவர்களின் வீட்டைக் கண்ட மாத்திரத்திலேயே தெரிந்துவிடும். அது வெறும் பொருட்களால் நிரப்பப்பட்ட பகுதி அல்ல, ஒவ்வொரு மூலை முடுக்கும் அன்போடு ரசனையும் சேர்ந்து நெய்யப்பட்ட இடம் என்று.

“ப்ளீஸ், உட்காருங்க, கண்டிப்பா சாயா குடிக்கணும், ரொம்ப நாளுக்கு அப்புறம் எனக்கு ஒரு விருந்தாளி, அதிதி தேவோ பவ” என சிரித்தார்.

பேச்சிலே தமிழும், மலையாளமும், ஆங்கிலமும், ஹிந்தியும் சரியான விகிதாச்சாரத்தில் கலந்து இருந்தது.

தொடரும்...

**வெ.சிவசங்கரி**

## திருத்தல பதிகம் பாடுதல் நிகழ்ச்சி

**இடம்** : கோமுக்தீஸ்வரர் ஆலயம், திருவாவடுதுறை

**நாள்** : 09.04.2024, **நேரம்** : மாலை 4.00 மணி

**பதிகங்கள் :**

சிவபுராணம், மின்னுமா மேகங்கள்,
இடரினும் தளரினும், தில்லைவாழ் அந்தணர்
150 குழந்தைகள் பதிகம் பாடுகிறார்கள்.

குருவின் அருளோடு பாராயணம் செய்ய
**அனைவரும் வருக! வருக!**
தொடர்புக்கு : **93859 84684 / 99949 26537**

## இராமாயணம் தரும் படிப்பினை

சென்றமாத தொடர்ச்சி...

தசரதன் மைந்தன் ராமன், அவன் மனைவி சீதை அழகி, இலக்குவன் பஞ்சவடியில் உள்ளனர். ராமனால் தான் அத்தனை அரக்கர்கள் அழிந்தனர். ராமனை யாரும் வெல்ல முடியாது. ஆனால் அவன் தனது மனைவி சீதை மீது அபாரமான அன்பு உள்ளவன். அவள் சிறந்த அழகி அவளை இராமனிடமிருந்து பிரித்து விடு. உனக்கும் அழகான மனைவி கிடைப்பாள். சீதையைப் பிரித்தால் ராமனை எளிதில் அழித்துவிடலாம் என்றும் கூறினான். அந்நேரத்தில் மூக்கறுபட்டு சூர்ப்பணகை அழுது கொண்டு இராவணன் முன்பு நின்றாள். மேலும் அவனிடம் ராமன் மனைவி சீதை உனக்குத்தான் சரியான ஜோடியாக இருக்க முடியும். உனக்காக அவளைத் தூக்கி வரமுற்பட்ட போது தான் இந்த அவலநிலைக்கு ஆட்பட்டேன் என்று அழுது கொண்டே கூறினார். சூர்ப்பணகை நடந்து கொண்டது ஒருவிதம், ஆனால் பொய்யாக இராவணனிடம் பேசி அவனையும் நிம்மதியாக இருக்க விடாமல் அவனைத் தூண்டிவிட்டால், இதுதான் அதர்ம நெறி கொண்ட, நேர்மையற்றபெண்களின் குணம், நல்லவர்களுடைய சம்பந்தம் கிட்டினால் தான் நாமும் சுற்றமும் நிம்மதியாக இருக்க முடியும்.

சீதையை அடைய இராவணன் மாரீசனின் உதவியை நாடினான். பஞ்சவடியில் இராமன் தனது அழகான மனைவி சீதையுடன் இருக்கிறான். எப்படியாவது அவளை நான் அடைய வேண்டும் என்கிறான் ராவணன். அப்போது மாரீசன் நான் கெட்டவனாக இருந்த போதிலும் நீ நல்ல முறையில் இருக்க அறிவுரை கூறுகிறேன். உனக்கு நிறைய

மனைவிகள் உள்ளனர். சீதை நெருப்பு போன்றவள். அவளை அடைய வேண்டும் என நினைப்பது தவறு. இதனால் உனது புகழ், குலம், நீ பெற்ற வரங்கள் எல்லாம் அழிந்து போகும். போர் வேண்டுமானால் ராமனிடம் செய்து சீதையை அடை, ஆனால் அவர்கள் இல்லாத நேரத்தில் அபகரிக்க என்ற யோசனையை உனக்குக் கூறியது யார்? நிச்சயம் அவர்கள் உன் நலனை விரும்பி கூறவில்லை. உனக்கும், உனது சமூகத்திற்கும் அழிவு ஏற்படவழி சொல்லியிருக்கிறார்கள். நான் சிறந்த அமைச்சராக உனக்கு அறிவுரை கூறுகிறேன். ராவணனின் காதில் இவை எதுவும் ஏறவில்லை. அவன் மாரீசனிடம், உன்னிடம் அறிவுரை கேட்க வரவில்லை. நான் சொன்னதைச் செய் என்று கட்டளையிட்டான். நீ அவர்கள் ஆஸ்ரமம் முன்பு வெள்ளிப் புள்ளிகளுடன் கூடிய பொன் மானாக உருவம் கொண்டு வலம்வர வேண்டும். உனது அழகைக் கண்டு மயங்கி, அதை பிடித்துக் கொடுக்கும்படி சீதை வேண்டுவாள். ராமன் உன்னைப் பிடிக்க வரும்போது வெகுதூரம் சென்றுவிடு. அங்கு சென்றவுடன் ராமர் குரலில் ஆபத்து வந்தது போல் கத்து உடனே இலக்குவன் ராமனுக்கு உதவி செய்ய கண்டிப்பாக அனுப்புவாள். அப்போது சீதை தனியாக இருப்பாள். அந்த நேரத்தை நான் பயன்படுத்திக் கொண்டு சீதையை அபகரித்து விடுவேன் என்றான். இந்தத் திட்டம் எதுவும் மாரீசனுக்குப் பிடிக்கவில்லை. விதி இராவணனை அழிவுப் பாதைக்கு இழுக்கிறது. சூர்ப்பணகை அவமானம், குல கௌரவம் அரசியல் நீதி என்று இராவணன் பேசியது எல்லாம் பொய். அவனது ஒரே நோக்கம் சீதையின் மீது ஏற்பட்ட காதல், அதை யாராலும் தடுக்க முடியாது. “வினாசகாலே விபரீத புத்தி” என்பார்கள். அதுதான் இராவணனுக்கு ஏற்பட்டுள்ளது. எப்படியும் தான் இறப்பது உறுதி.

இராம பாணத்தினாலே இறந்து போகலாம் என முடிவெடுத்து மாரீசன் அவனது திட்டத்திற்கு ஏற்றுக் கொண்டான்.

இராவணன் கூறியபடி மாரீசன் பொன்மான் வேடம் போட்டுக்கொண்டு சீதையின் குடில்முன் சென்று ஓடி ஆடினான். அவர்கள் திட்டப்படியே எல்லாம் நடந்தது இதே போன்றமான் உலகில் கிடையாது, இது மாரீசனின் மாயாஜாலம் என்று இலக்குவன் கூறியபிறகு சீதைக்காக மான் பின் ஓடியது இராமனின் விதி. இலக்குவனைப் போன்றபவித்ரமான ஆத்மாவை, மனிதன் சீதை சுடு சொல் கொண்டு பேசியது சூழ்நிலை, விதியின் ஏற்பாடுதான். போலி வேடத்தில் (சாமியார் வேடத்தில்) இராவணன் சீதையிடம் வந்து புகழ்ந்து பேசி அவளை அபகரித்தது – அவனது அழிவிற்கே அவன் வழி வகுத்துக் கொண்டான். உறுதியான, சஞ்சலமில்லாத மனிதனுக்குத் தான் துன்ப நேரங்களிலும் மூளை சரியான முறையில் வேலை செய்யும். அவன் உத்தம மனிதன்.

தொடரும்...

## வருந்துகிறோம்

திருச்சி வேதபாரதி பொறுப்பாளர் ஸ்ரீ நந்தகுமார் (எல்.ஐ.சி) அவர்களின் மாமனார் **ஸ்ரீமான் ஸ்வாமிநாத ஸ்ரௌத்ரிகள்** சென்னை, ஆதம்பாக்கத்தில் 29.03.2024, வெள்ளிக்கிழமை சிவலோக ப்ராப்தி அடைந்தார்கள். வேதத்திற்காக மட்டுமே தன்வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து மஹான்களின் பரிபூரண ஆசிகள் பெற்றவர்.

வேதபாரதி தனது ஆத்மார்த்தமான இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.



# ஸ்ரீ சங்கரா இலவச முதியோர் இல்லம்

ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை (Regd.)
பண்டித மேடு, திருப்போரூர் அருகில்

ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அருளாசியுடன், ஹிந்து சேவா சமாஜம் அறக்கட்டளை ஓர் இலவச முதியோர் இல்லத்தை திருப்போரூர் அருகில் உள்ள பண்டித மேடு கிராமத்தில் நிர்வகித்து வருகிறது. அங்கு 50 முதியவர்கள் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர்; இந்த நிர்வாகம் உங்கள் ஆதரவை நாடுகிறது:

திருமண நாள், பிறந்த நாள், நினைவு நாள் போன்றவற்றில் ஒன்றை தேர்ந்தெடுத்து ரூ.3000/- அளித்தால் முதியோர் இல்லத்தின் ஒரு நாளின் செலவுக்கு ஆகும்.

தங்களுக்கு விருப்பமான தொகையை கீழ்க்கண்ட விலாசத்திற்கு "ஹிந்து சேவா சமாஜம் டிரஸ்ட்" **(HINDU SEVA SAMAJAM TRUST)** என்ற பெயரில் காசோலை அல்லது கணினி வழி வங்கி கணக்கு மூலமாக நேரடியாக அனுப்ப வங்கி கணக்கு எண்.: **914010003352646;** ஆக்ஸிஸ் பேங்க், துரைப்பாக்கம் கிளை, **IFS CODE : UTIB0001566** அனுப்பலாம். கணினி வழியாக அனுப்புவோர் அவசியம் பணம் அனுப்பிய விவரத்தை கீழ்காணும் எண்ணுக்கு எஸ்.எம்.எஸ். செய்யவும். இவ்வுதவி செய்பவர்களுக்கு 80G பிரிவின்படி வரிச்சலுகை உண்டு.

**M. இராமகிருஷ்ணன்,** அறங்காவலர்
71, முதல் பிரதான சாலை, காந்தி நகர்,
அடையாறு, சென்னை - 600 020.
Cell : 93810 45601 | Email : amarabharathy7@gmail.com

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# அனைவரையும் வியக்க வைத்த மாமனிதர் ஸ்ரீ ஆ.ம.ரா :

*(ஸ்ரீ ஆ.ம. ராமகிருஷ்ணன், தாளாளர், ஸ்ரீ சங்கர வித்யாலயா)*

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸௌஜன்ய குருநாதர் ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பூர்வாஸ்ரம சகோதரர் என்று தம்மை ஒருபோதும் அடையாளம் காட்டிக் கொள்ளாத மாமனிதர் ஸ்ரீ ஆ.ம. ராமகிருஷ்ணன் அவர்கள் 03.03.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கர மடத்திற்கும், திருவண்ணாமலை மகான் வழுவூர் சற்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் தாய்வழி வம்ச பேரனாகிய எனக்கும் ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக அழுத்தமான ஆன்மீகத் தொடர் இருந்து வருகிறது.

1990, அக்டோபரில், விஸ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாட்டில் R.S.S. மூலமாக அயோத்யா ஸ்ரீ ராமஜென்ம பூமி கர சேவைக்காக புறப்படும் முன்பு ஸ்ரீ பெரியவர்களை பிரத்யேகமாக சந்திக்க ஸ்ரீ ஆ.ம.ரா அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தார்கள். ஸ்ரீ பெரியவர்கள் வெகுநேரம் கர சேவையின் விபரங்களைக் கேட்டறிந்து, பின்னர் பிரார்த்தனை செய்து கொண்டு பிரசாதம் அருளி ஆசீர்வதித்தார்கள்.

நான் MMTC (மத்திய அரசு சார்பு நிறுவனமான தாது உலோக வர்த்தக கழகத்தில்) பணியாற்றி வந்ததாலும், தொழிற்சங்க அகில இந்திய பொறுப்பாளராக இருந்த காரணத்தாலும் அவருடன் அவ்வப்போது ஆலோசிப்பேன். சூழ்நிலையை ஆராய்ந்து அவர் வழங்கி வந்த ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலானது தொழிற்சங்க அனுபவசாலிகளுக்கு இருந்த அனுபவ ஆற்றலை மிஞ்சும் அளவிற்கு அவரது ஆழ்ந்த அறிவு என்னை வியக்க வைத்தது.

1999-ல் பிப்ரவரி மாதம் நான் மத்திய அரசு

(ஓய்வூதிய வாய்ப்பு இல்லாத) பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெறும் முன்பாக, மடத்திற்குச் சென்று ஸ்ரீ பெரியவர்களை தரிசித்தபோது, என்னை ஸ்தல யாத்திரைகளை முடித்துக்கொண்டு, 2000, மே மாத வாக்கில் ஸ்ரீ மடம் வருமாறு அருளாக்ஞை இட்டார்கள். அவ்வண்ணமே, சென்னை, பண்டரிபுரம் பாத யாத்திரை உட்பட பல்வேறு ஸ்தல யாத்திரைகளை முடித்துக் கொண்டு 2000 மே இறுதியில் ஸ்ரீமடம் சென்றபோது ஸ்ரீ பெரியவர்கள் அங்கு வந்திருந்த ஸ்ரீ ஆ.ம.ரா. அவர்களைக் கூப்பிட்டு, என்னை அவரது பொறுப்பில் இருந்த தாம்பரம் சங்கரா பள்ளியில் அலுவலக நிர்வாகப் பணிக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு பணித்தார்கள்.

2000 ஜூன் 1 முதல் தாம்பரம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில் நிர்வாக அலுவலராக பொது ஜன தொடர்பு பணியுடன் பொறுப்பேற்றுக் கொண்டு, இன்றளவும் குரு பக்தியோடு தன்னலமற்றஒரு வேள்வியாக பணிபுரிந்து வருகிறேன். இந்த 24 வருடங்களில் அவரை அருகில் இருந்து கவனித்து, அவரது அற்புதமான குணாதிசயங்களால் கவரப்பட்டு எனது சேவையில் மெருகேறி வருவதை நன்கு உணருகிறேன்.

அசைக்க முடியாத குரு பக்தி. தளர்வில்லாத தன்னம்பிக்கை, மற்றவர் சொல்வதை பொறுமையுடன் கேட்டறிந்து, யோசித்து, உரிய மரியாதை அளித்து உண்மை நிலையை பக்குவமாக எடுத்து இயம்புதல், நிர்வாகத்தின் நலனுக்கும் மேம்பாட்டிற்கும் எவ்வித குந்தகமும் ஏற்படாதவாறு அலுவலக நிர்வாகத்தில் நேர்மையுடன் செயற்படுதல், அடுத்தவரது கோரிக்கைகளின் நியாயத்தை உணர்ந்து இருதரப்பிற்கும் கௌரவமான தீர்வு காணுதல், செயலாற்றுவதில் தவறுகளை ஒப்புக் கொண்டு சரி

*செய்து கொள்ளுதல், மாணாக்கர்கள் – பெற்றோர் – ஆசிரியப் பெருமக்கள் - நிர்வாகம் இவை நான்கிற்கும் ஒருங்கிணைப்பு பாலமாக செயற்படுதல் ஆகிய நற்பண்புகள் மூலம் என் போன்றோருக்கு அவரால் கிடைத்த அரிய பொக்கிஷங்கள் என்றால் மிகையல்ல!*

*தாம்பரம் பள்ளி வளாகத்தில் ஆன்மீக சம்பந்தமான நிகழ்வுகளுக்கு பராமரிப்பு கட்டணம் எதுவும் விதிக்காமல், தேவையான அனைத்து வசதிகளையும் இலவசமாக செய்து கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.*

*முன்னறிவிப்பின்றி அவரைக் காண வருவோரைக் கூட, சற்றே தாமதமானாலும், தம் பணிகளுக்கிடையே, அவர்களுடன் இனிமையோடு பேசி, அவர்களை மனநிறைவுடன் அனுப்பி வைப்பார். வயது வித்தியாசமின்றி இரு கைகளையும் கூப்பியவாறு* "Happy Life" *என்றஉச்சரிப்புடன் இன்முகத்துடன் காண வரும் அனைவரையும் வரவேற்பதும் வழியனுப்புவதும் அவருக்கே உரிய உயர் பண்பான தனி வழியாக இறுதிவரை இருந்து வந்துள்ளது.*

*தவறுகள் விவாதமின்றி மனமுவந்து ஒப்புக்கொள்ளப்படும்போது, அவற்றை பெரிதுபடுத்தாமல், மீண்டும் தவறுகள் நிகழாவண்ணம் செயற்படுமாறு அன்பு கலந்த கண்டிப்போடு அனைவரையும் நெறிப்படுத்துவது அவரது தனிச்சிறப்பு!*

*எவரையும் எதற்காகவும் சங்கடப்படுத்தாமல் வற்புறுத்தாமல் தமது கனிவான அணுகுமுறையால் ரத்தினச் சுருக்கமான பேச்சால் காரியங்களை வெகு சுலபமாகவும் நேர்த்தியாகவும் நடத்திக் கொள்வதும் அவரது தனிச்சிறப்பு.*

தொடரும்...

**ராம் ராம் சுந்தரராமன்**

## தமிழ் எழுத்தாளுமைச் சித்தர் தேவன் எழுப்பிய இலக்கிய விழிப்புணர்வு உரை

பிரபல தமிழ் எழுத்தாளர் தேவன் நினைவாக அறக்கட்டளை ஒன்று சீரிய முறையில் இயங்கி வருகிறது. பிரபல தமிழ் பத்திரிகையாளர் சாருகேசி தாம் இலக்கியப் பணியே உயிர் மூச்சு என்று இருந்தவரை இந்த அறக்கட்டளையைச் செவ்வனே நடத்தி வந்தார். அவரது மறைவிற்குப் பின்னர் அவரது சகோதரியான திருமதி. சாந்தி லக்ஷ்மணன் இப்பொறுப்பை ஏற்று சிறப்புடன் நடத்தி வருகிறார். தமிழ் இலக்கிய உலகில் மற்றும் அனைத்துலக தமிழ் வாசகர்களின் இதயங்களில் தேவன் அவர்களது எழுத்துக்கள் இன்றளவும் ஏற்படுத்தி வரும் நேர்மறையான தாக்கங்களை மனதில் கொண்டு பிரபல தமிழ் அறிஞர்கள் பலரை வரவழைத்து தேவன் அவர்கள் ஆற்றிய இலக்கிய பணி பற்றிய விரிவுரைகளை / செமினார்கள் இவற்றை ஏற்பாடு செய்தும் தமிழ் அறிஞர்களை கவுரவித்தும் வருகிறது.

இலக்கிய உலகில் சாதனைகள் பல புரிவோரை மேலும் ஊக்கம் கொடுத்து அவர்களது எழுத்துக்கள் மேலும் பல கோடி வாசகர்களை சேரவேண்டும் என்கிறஉயர்ந்த நல்லெண்ணத்தில் இந்த ஆண்டுக்கான தேவன் அறக்கட்டளை விருதாக பிரபல எழுத்தாளர்களாக விளங்கி வரும் மருத்துவரான திரு.ஜெ.பாஸ்கரன், திருமதி. காந்த லட்சுமி சந்திரமௌலி, நாவலர் நாராயணன் (சாஹித்ய கர்த்தா) ஆகிய மூன்றுபேரைத் தேர்ந்தெடுத்து விருதுகளை வழங்கியது.

**ஸ்ரீ நாவலர் நாராயணன் :** இவர் மிகச் சிறந்த கவிஞர் மற்றும் எழுத்தாளர். எண்ணற்ற தமிழ்

கவிதைகள் எழுதியுள்ளார். அவரது பல சாஹித்தியங்கள் நன்கு அறியப்பட்ட கர்நாடக இசைக்கலைஞர்களால் சங்கீத மேடைகளில் தொடர்ந்து பாடப்பட்டும், சாஹித்ய வரிகள் எல்லாம் ரசிகர்களால் உள்வாங்கி அவற்றை மனனம் செய்து பாடப்பட்டும் சிறப்புப் பெற்று வருகின்றன. “சங்கீத சமுத்திரக் கரையான மைலாப்பூர் மேடையில் தனக்கு கிடைத்திருக்கும் இந்த உயரிய விருது பெருமை அளிக்கிறது”, என்றார் நாராயணன்.

**ஸ்ரீ ஜெ. பாஸ்கர் :** தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த டாக்டர் ஜே.பாஸ்கர், சென்னையில் பிரபலமான நரம்பியல் நிபுணர் மற்றும் தோல் மருத்துவர், மருத்துவத்துறையில் முழு அளவிற்கு ஈடுபாடு இருந்தாலும், இலக்கியம் தமக்கு இதயம் என்கிறார் பாஸ்கர், தமிழில் நன்கு அறியப்பட்ட எழுத்தாளர் மற்றும் பல நூல்களை வெளியிட்டுள்ளார்.

**ஸ்ரீ காந்தலட்சுமி சந்திரமௌலி :** வாசகர் எதிர்பார்க்கும் வண்ணம் தமிழிலும், ஆங்கிலத்திலும் கதைகள், கட்டுரைகள் பலவற்றை எழுதி வருபவர். நம் வேதபாரதிக்கு நன்கு அறிமுகமானவர். பல்வேறு தலைப்புக்களில் சுமார் 100க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவரது ஸ்பெஷாலிட்டியே என்னவென்றால் : பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நன்றாக வளர்த்து, அவர்களது எதிர்காலத்தை ஒளிர வைப்பதில் பெரும்பங்கு ஆற்றவேண்டும் என்பது தான். அத்தகைய விழிப்புணர்வு மிக்க நாவல்கள், கதைகள், கட்டுரைகள் பல புனைந்து வெளியிட்டுள்ளார். உளவியல் கல்வியின் பின்புலத்துடன், பெற்றோர்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க உதவுவதில் அவர் தொடர்ந்து

பணியாற்றுகிறார்.

மிக மிக அமைதியாக நிகழ்ச்சியின் சிறப்பு பேச்சாளர்களான கலைமகள் ஆசிரியர் திரு.கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன் அவர்களும், எழுத்தாளர் இரகுராமன் அவர்களும் திரு.தேவன் அவர்கள் தமிழ் இலக்கியப்பணியில் தம்மை முழுமூச்சாக ஈடுபடுத்திய தன்மை, அவரது எழுத்துக்களில் பொதிந்திருந்த நகைச்சுவைத்தன்மை, அவர் கொண்டிருந்த சமுதாய ரீதியிலான தொலைநோக்கு பார்வை ஆகியவற்றைதேவன் அவர்களின் எழுத்துப் பொக்கிஷங்களிலிருந்தே பல உதாரணங்களுடன் சிறப்புரையாக எடுத்தியம்பினர். தேவன் அவர்களின் கைவண்ணத்தில் வந்த நாவல்களை இதுகாறும் படித்தறியும் வாய்ப்பு பெறாதவர்கள் கூட சிறப்புரைகள் கொண்டிருந்த புள்ளி விவரங்களிலிருந்து தேவன் கதைகளை உடனே படித்தே ஆக வேண்டும் என்கிறகொள்கைக்கு உடன்பட்டனர்.

விருதினை பெற்றுக்கொண்ட எழுத்தாளர்கள் மூவரும் ஏற்புரை வழங்கினர்.




Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
WOPPER
Fluid Chemistry

# ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹா பெரியவா சரணம் சரணம்
# கோடி காயத்ரீ ஜப யக்ஞம் – 2024

திருச்சி

*திருச்சி ஸ்ரீரங்கம், பள்ளி வளாகத்தில் மார்ச் 23, 24 இரண்டு நாட்கள் கோடி காயத்ரீ ஜப யக்ஞம் சீரும் சிறப்புமாக மஹான்கள் ஆசிகளுடன் நிறைவேறியது.*

*23.03.2024 காலை கணபதி ஹோமம்*

*சாஸ்திரிகள் குழுவினர், கோபூஜையுடன் ஆரம்பித்து நடத்தினார்கள். 50 பேர்களுக்கும் மேலாக தன்னார்வலர்கள், வேதபாரதி திருச்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ கணபதி த்யானம், பூஜை, ஹோமம் நடந்தது. காலை உணவிற்குப்பின் வேதபாரதி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திருநெல்வேலி, ஊரப்பாக்கம், சென்னை, கும்பகோணம், கோவை, திருப்பூர் பாண்டி, திருச்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு அவரவர் ஊர்களில் நடைபெறும் நிகழ்வுகள் புத்தக சந்தா சேர்த்தல் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.*

*10.30 மணி முதல் ஹோம குண்டம் கட்டும் பணியும், திரவியங்கள் சேர்க்கும் பணியும் நடைபெற்றது. மிக நேர்த்தியாக யாக சாலையும் புனிதமான பசுஞ்சாணம் மெழுகுதல், தோரணங்கள் கட்டுதல், இருக்கை ஏற்பாடுகள், குடிநீர் வழங்குதல், பொது உணவு வழங்குதல், சாப்பிட்ட தட்டுகள் அப்புறப்படுத்துதல், சேகரிப்பு, முறையான சுத்தம் செய்தல் பணிகள் நடைமுறைப்படுத்த நிர்வாகிகள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டார்கள்.*

*மதிய உணவு வழங்கப்பட்டது.*

*4.30 மணி முதல் ஸ்ரீ ரங்கம் விஷ்ணு சகஸ்ர நாம குழுவினரும், வேதபாரதி அன்பர்களும் ஸ்ரீ விஷ்ணு*

ஸகஸ்ரநாம பாராயணம் செய்தார்கள். மாலை அனுஷ்டானம் முடிந்து குழந்தைகளின் நாம சங்கீர்த்தனம் நிகழ்ச்சி நடைபெற்றது. 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் நாம சங்கீர்த்தனம் மிக அருமையாக பாடியதோடு மட்டுமல்லாமல் பாரம்பர்ய உடை, நம் கலாச்சாரத்தின் மீது உள்ள பிடிப்பு, குடும்பத்துடன் கலந்து கொண்டது எல்லோரிடமும் நம் பாரம்பர்யத்தை வெளிக்கொணர்ந்தது. ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் கணேசன் தம்பதியர்கள் இந்த புனிதமான பணியினை பல குடும்பங்களுக்கு கற்பித்து வருகிறார்கள்.

எல்லா குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கி உணவு பரிமாறப்பட்டது.

24.03.2024 ஞாயிறு காலை 6.30 மணி முதல் காயத்ரீ ஹோம ரித்விக்குகள் வரத்தொடங்கினார்கள். ஸங்கல்பம், மிக மிக அருமை. அனுபவித்து உள்ளபூர்வமாக கலசபூஜை, சங்கல்பம் செய்து கொடுத்த வாத்யார்களுக்கு எங்கள் நமஸ்காரங்கள்.

19 ஹோம குண்டங்களில் எல்லா ஜபக்காரர்களும் அமர்ந்து 8.15 மணியளவில் ஹோமம் ஆரம்பிக்கப்பட்டது. 10.40 மணிக்கு ஹோமம் நிறைவு பெற்றது. வேதபாராயணம், சூக்தங்கள் பாராயணம் செய்தார்கள். எல்லோருக்கும் தாக சாந்தி பானகம் நீர்மோர் வழங்கப்பட்டது.

வேதபாரதி - திருச்சி வேண்டுகோளுக்கு இணங்க நெரூர் பூஜ்யஸ்ரீ வித்யா ஸங்கர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆசியுரை வழங்கினார்கள். அற்புதமான, மிகவும் பயனுள்ள, அனுஷ்டான காயத்ரீ மந்த்ர மஹிமை, இதிகாச புராணங்களில் காயத்ரீ மந்த்ரங்களால் புராண புருஷர்கள் சாதனையும் நமக்கு புரியும்படி வழங்கினார்கள்.

எல்லோருக்கும் சுவையான ஆசாரமான ஆகாரம் வழங்கப்பட்டது. திருச்சி சந்த்ரசேகர் தலைமையில் ஸ்ரீ ஜெயராமன், ஸ்ரீ நந்தகுமார், ஸ்ரீமதி நித்யா, ஆசிரியர் வெங்கடேசன் மற்றும் குழுவினர் எடுத்த சீரிய முயற்சி உழைப்பு, திட்டமிடல், மிகவும் சிறப்பு. எல்லா நல்ல உள்ளங்களுக்கும் பள்ளி நிர்வாகத்திற்கும் வேதபாரதியின் பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்,

**நலமுடன் வாழ இறைவனை வேண்டும்**

**வேதபாரதி.**

## வேத பாராயண நிகழ்ச்சி

*31.03.2024* அன்று காலை *7.30* மணி முதல் *9.30* மணி வரை வேளச்சேரி, ஸ்ரீ சுந்தர விநாயகர் ஆலயத்தில் வேதபாரதி குழுவினரால் வேதபாராயண நிகழ்ச்சி நடைபெற்றது. திரளான உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

## ஸ்ரீ சங்கர ஜயந்தி

நாள் :*12.05.2024*,

இடம் : ஸ்ரீ சங்கர குருகுலம், மந்தைவெளி

நேரம் : மாலை *4.00* மணிக்கு

வேதபாரதியின் வேதபாராயணம்

**அனைவரும் வருக, வருக.**

99940 89133 99940 89140



**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

# பத்தின் சிறப்புகள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

**I. பத்துவித சம்ஸ்காரங்கள் :**

*1. ஆவாஹனம், 2. ஸ்தாபனம், 3.ஸாந்நித்தியம், 4. ஸந்நிரோதனம், 5.அவகுண்டனம், 6.தேனுமுத்திரை, 7. பாத்யம், 8. ஆசமனம், 9.அர்க்கியம், 10.புஷ்பம் சமர்ப்பித்தல்*

**II. உண்மை பக்தர்களின் புறம்பாய்த்தோன்றுவன :**

*1. கண்டம் தழுதழுத்தல் 2. நா அசைதல் 3. இதழ் துடித்தல் 4. நடுக்கமுறல் 5. மயிற்கூச்சரிதல் 6. அங்கம் வியர்த்தல் 7. தள்ளாடிவிழல் 8. கண்ணீர் பிலிற்றல் 9. கலுடிந்து இரங்கல் 10. ஆர்வத்தால் பரவசப்படல்*

*இவற்றை 'எமய்தான் அரும்பி' எனத்தொடங்கும் திருவாசகத்தால் அறியலாம்.*

**III. இறைவன் திருவருளைப் பெற்ற அடியார்களின் பண்புகள் :**

*1. மலம் 2. மாயை 3. இருவினைப் பிணிப்பு ஆகியவை அகலுதல் 4. சிறப்பிலார் தம் திறத்துச் சேர்வையறல் 5. திருத்தொண்டரோடு கூடல் 6. இறைவன் பால் நாட்டம் கூடல் 7. பசைமலம் இசையது பாறல் 8. ஐவர் ஆட்டு அடங்கி நல்வழி நிற்றல் 9. நற்றவம் புரிதல் 10. இறைபணி நிற்றல்*

**IV. நடராசர் ஆடும் பத்துவகை நடனங்கள் :**

*1. கொடு கொட்டி 2. பண்டரங்கம் 3. சோடு 4. சங்காரம் 5. நடம் எட்டு 6. நடம் ஐந்து 7. நடம் ஆறு 8. தேவ தாருவனம் 9. தில்லைவனம் 10. வடமாவனம்*

**V. திருமால் அவதாரம் பத்து**

*1. மச்சம் 2. கூர்மம் 3. வராகம் 4.நரசிம்மம் 5. வாமனம் 6. பரசுராமர் 7. ஸ்ரீராமர் 8. பலராமர் 9. கண்ணன் 10. கல்கி.*

**VI. மனு ஸ்மிருதி கூறும் தர்மத்தின் 10 இலக்கணம்**

*1. பொறுமை 2. மன்னித்தல் 3. மனவடக்கம் 4. திருடாமை 5. அகமும், புறமும் தூய்மை 6. இந்திரியங்களை நிக்ரஹித்தல் 7. சாஸ்திரஞானம் 8. ஆத்ம ஞானம் 9. உண்மைபேசல் 10. கோபமின்மை*

**VII. தசமபுராணங்கள் :**

*1. சைவபுராணம் 2. பவிஷ்யபுராணம் 3. மார்க்கண்டேய புராணம் 4. இலிங்கபுராணம் 5. கந்தபுராணம் 6. வராகபுராணம் 7. வாமனபுராணம் 8. மச்ச புராணம் 9. கூர்ம புராணம் 10. பிரம்மாண்ட புராணம்.*

**VIII. பிள்ளைத்தமிழ் பருவங்கள் 10**

*1. காப்பு 2. செங்கீரை 3. தால் 4. சப்பாணி 5. முத்தம் 6. வருகை 7. அம்புலி - எஞ்சிய மூன்றும் ஆண்பால், பெண்பால் எனவேறுபடும்.*

*ஆண்பால் : 8. சிற்றில் 9. சிறுபறை 10. சிறுதேர்*

*பெண்பால் : 8. அம்மானை 9. நீராடல் 10. ஊசல்*

தொடரும்...

## ஊரப்பாக்கம் நிகழ்ச்சி

ஸ்ரீ காயத்ரீ மாதாவின் அனுக்ரஹத்தினால் வேதபாரதி ஊரப்பாக்கம் அமைப்பின் சார்பாக ஏற்பாடு செய்து வரும் பிரம்மசாரி குழந்தைகளுக்கான சமிதாதானம் மற்றும் ஸகஸ்ர காயத்ரீ ஜபம் தொடங்கப்பட்டு 50வது வாரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்திரம் மற்றும் பௌர்ணமி திருநாளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. வாரந்தோறும் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் அப்பகுதியில் உள்ள அனைவரும் அவசியம் கலந்து கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

# புதுவையில் ஔவை விழா

வேதபாரதி செய்துவரும் சத்கார்யங்களில் ஔவை விழாவும் ஒன்று. இதன் மூலம் பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு ஒழுக்க நெறி சார்ந்த வாழ்வியல் போதனையான ஔவைப் பிராட்டியின் "ஆத்தி சூடி" "கொன்றைவேந்தன்" பயிற்றுவிக்கப் படுகிறது.

இதன் தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டும் புதுச்சேரியிலுள்ள ஒவ்வொரு பள்ளிக் குழந்தைகளுக்கும் போதிக்கும் வகையில், இந்தாண்டு புதுவை "அமிர்த வித்யாலயம்" பள்ளியில் கல்வி பயிலும் மூன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான சுமார் 1100 குழந்தைகளுக்கு சில மாதங்களுக்கு முன்பே புத்தகங்கள் கொடுத்து பயிற்றுவிக்கப்பட்டது.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் பயின்ற சிறார்களை ஊக்குவிக்கும் வகையில் ஒப்புவித்தல் போட்டி நடத்தப்பட்டு, அதில் குழந்தைகளின் திறனுக்கேற்ப முதல், இரண்டாம், மூன்றாம் மற்றும் ஊக்கப் பரிசுகளும் சான்றுகளும் வழங்கப்பட்டன. கலந்துகொண்ட அனைத்து மாணவ மாணவியருக்கும் சான்றிதழ்களும், விநாயகப் பெருமான், ஔவைப் பிராட்டி படங்கள் "போட்டோ"க்களும் வழங்கப்பட்டன.

புதுச்சேரி, மூலக்குளத்திலுள்ள அமிர்த வித்யாலயப் பள்ளியில் கடந்த 13.01.2024 அன்று நடைபெற்றபரிசுகள் விழாவில் உழவர்கரை தொகுதி, சட்டமன்றஉறுப்பினர் திரு. M.சிவசங்கர், போக்குவரத்து காவல் கண்காணிப்பாளர் திரு. M.மோகன்குமார் மற்றும் வேதபாரதி பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். சுமார் 300க்கும் மேற்பட்ட பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி, கிருமாம்பாக்கத்திலுள்ள “அமிர்த வித்யாலயம்” மற்றொரு பள்ளியிலும் கடந்த 09.02.2024 அன்று பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் ஏம்பலம் தொகுதி சட்டமன்றஉறுப்பினர் திரு. U.லட்சுமிகாந்தன், அமிர்த வித்யாலயம் பள்ளி மேலாளர் பிரம்மச்சாரிணி. காயத்ரி மாதா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க சுமார் 150க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விரு பள்ளிகளிலும் பரிசளிப்பு விழாவிற்கான ஏற்பாடுகளை அமிர்த வித்யாலயம் பள்ளி முதல்வர் திரு.S.ராஜசேகர், புதுச்சேரி வேதபாரதி நிர்வாகிகள் திரு. N.J.L.ரமேஷ், அட்வகேட் திரு. C.பட்டாபிராமன், திரு. R.சந்திரசேகரன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

இரண்டு பள்ளிகளிலும் போட்டியில் பங்குபெற்றமாணவச் செல்வங்கள், பரிசளிப்பு விழாவில் பங்குபெற்றபெற்றோர்கள் ஆகியோரின் ஆர்வமும் கலந்து கொண்ட அக்கறையும், ஆத்திசூடி கொன்றைவேந்தன் ஆகியவற்றின் மீது அவர்கள் தெரிவித்த கருத்துக்களும் வேதபாரதி முன்னெடுத்து நடத்தும் “ஔவைவிழா”வின் சிறப்புக்களையும், பெருமைகளையும் பறைசாற்றியது எனலாம்.

**- ஆதிரையன்**

## வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விவரம்

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.200
10 வருட சந்தா ரூ.1500
வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

## புதுவை நிகழ்ச்சி - “உபன்யாசம்”

இதிகாசங்களும், புராணங்களும் பூமியில் மனிதர்கள் தர்மநெறி சார்ந்து வாழ்வதற்கும், அறம் வளர்ப்பதற்கும் தலைமுறை தலைமுறையாக வழிகாட்டும் வகையில் நமக்கு கிடைக்கப்பெற்றபொக்கிஷங்களாகும். இவற்றிலுள்ள கருத்து சாற்றைபிழிந்து பருகும் ரசமாக எளிமையாக வழங்கி வருகின்றனர். ஆன்மீகப் பெரியோர்கள் இந்த பெரியோர்களை கொண்டு திருக்கோவில்கள், சபாக்கள், மன்றங்களில் வைத்து மக்களிடையே அறம் வளர்க்க சொற்பொழிவுகள் நடத்தப்படுவது காலந்தொட்டே வரும் வழக்கம். இவை சமீப காலமாக குறைந்து ஊடகங்கள் வாயிலாகவே தற்போது கிடைத்து வருகின்றன என்றாலும், இதனால் நேரிடையாக கிடைக்கும் அனுபவம் கிடைப்பதில்லை.

இக்குறைகள் தீர்க்கும் விதமாக புதுச்சேரி வேதபாரதி கடந்த 15.03.2024 முதல் 17.03.2024 வரை வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு என மூன்று நாட்கள் உபன்யாசத்திற்கு ஏற்பாடு செய்து, புதுச்சேரி, காந்தி வீதி, அருள்மிகு பெருந்தேவி தாயார் சமேத வரதராஜப் பெருமாள் கோவிலில் நடைபெற்றது.

கலைமாமணி திருச்சி ஸ்ரீ கல்யாணராமன் அவர்கள், ஒவ்வொரு நாளும், “திரௌபதி மானம் காத்தல்”, “நள சரித்திரம்”, “குசேலனும் கண்ணனும்” என்றதலைப்புகளில் உபன்யாசம் செய்தார். புராணங்கள் கூறும் செய்திகளை எளிதில் மக்கள் மனங்களில் பதிவதற்கேற்ப துணைக் கதைகளோடு அவர் எடுத்து கொண்டவிதம் அலாதியானது. மனிதப் பிறவி எடுத்து நாம் எளிதில் இறைவன் திருப்பாதம் அடைய “பகவான் நாம ஸ்மரணம்” எவ்வளவு முக்கியமானது மற்றும் எளிமையானது என்பதை மூன்று நாட்களும் திரும்ப திரும்ப மக்களிடைய

செல்லும் வகையில் அவருக்கே ஆன நடையில் அழகாக எடுத்துரைத்தார்.

நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு அனுபவித்த இந்த பக்தி சொற்பொழிவு நிறைவில் ஒவ்வொரு நாளும் கூறும் வகையிலும், கண்ணனின் அருள் பெறும் வகையிலும் அவல் கூடுதலாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை புதுச்சேரி வேதபாரதி சிறப்பாக செய்திருந்தது.

**ஆதிரையன்.**


உ

குருவே சரணம்

**வேதபாரதி சென்னை**



**ஸந்த்யா வந்தன**

**அனுஷ்டான**

**பயிலரங்கம்**



**நாள் : 27.04.2024 & 28.04.2024**

**(சனி & ஞாயிறு)**

**இடம் : APL குளோபல் பள்ளி,**

**துரைப்பாக்கம், சென்னை**

உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள்,
பெரியவர்கள் கலந்து கொள்ளலாம்.
எல்லா ஸாகைகளுக்கும்,
ஸம்ப்ரதாயங்களுக்கும் ஆசிரியர்கள் உண்டு.

முன்பதிவு அவசியம்

**70101 88571 / 98402 01625**

## ஊரப்பாக்கம் நிகழ்ச்சி

*ஜனவரி மாதம் 26, 27, 28 மூன்று நாட்கள் ஊரப்பாக்கம் ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற அதிருத்ர நிகழ்ச்சியில் ஊரப்பாக்கம் வேதபாரதி குழுவினர் வேத விற்பன்னர்களுக்கு மூன்று நாட்களும் போஜன ஏற்பாடுகள் செய்வதில் மிகுந்த பொறுப்புடன் நடந்துகொண்டார்கள். இந்த யக்ஞத்தில் மிக முக்கியமான பணியாகிய பொருட்கள் வாங்குதல், போஜனம் தயார் செய்தல், பரிமாறுதல் ஆகியவற்றை மிகவும் நேர்த்தியாக செய்து கொடுத்தார்கள். ஊரப்பாக்கம் வேதபாரதி குழுவினர்கள் சகல சௌபாக்கியமும் பெற்று வாழ ப்ரார்த்திக்கிறோம்.*

*10.03.2024 ஞாயிற்றுக்கிழமை மாலையில் ஆதனூர், (கூடுவாஞ்சேரி) கிருஷ்ணபுரி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ நீலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் நமது வேதபாரதி அமைப்பின் வேத வித்யார்த்திகளை கொண்டு "ஸ்ரீ ஏகாதச ருத்ர ஜபம்" மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அப்பகுதியில் உள்ள பலரும் இதில் கலந்து கொண்டனர். லோக க்ஷேமத்திற்காகவும் கோயில் நிர்வாகம் கேட்டுக் கொண்டதிற்கு இணங்க ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில் 60க்கும் மேற்பட்ட வித்தியார்த்திகள் மற்றும் பொதுமக்கள் பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.*

*இந்நிகழ்ச்சியானது இயற்கை சூழல் நிறைந்த இத்திருக்கோயில் வளாகத்தில் குறிப்பாக மாலைப்பொழுதில் இது போன்றஒரு வேத பாராயணத்தில் கலந்து கொண்ட அனைவர்க்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.*

*ஓம் நமசிவாய, நன்றி*

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.
Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071
Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்


பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple·seamless·secure
DRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th April 2024



வாழ்க்கையில் எத்துனை துன்பங்களை கடந்த போதிலும்
அதிலிருந்து மீள்வதற்கும், நம்பிக்கை பெறுவதற்கும்
இருப்பது மழலையின் சிரித்த முகம் ஒன்றே...

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்®

287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829
97862 41829 www.suryajewellers.co.in

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.